# மறை ஞானப்பேழை



சத்தியம் வந்துவிட்டது !
அசத்தியம் அழிந்து விட்டது !
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

January 2025 ஜனவரி 2025

Retail Selling Price 25

Volume - 16, Issue - 10

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **300/-** |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **3000 /-** |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


ஜமாதுல்அவ்வல் - ஜமாதுல் ஆகிர்

**ஜனவரி 2025**
**Volume - 16 Issue 11**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்
திருமறைப் பக்கம்.
அமுத மொழிகள்.
உமர் (ரலி) புராணம் – நயம்.
முதலாம் ஆண்டு கந்தூரி.
ஞானக்கொடி ஏற்றுவோம்.
கந்தூரித் திருநாள்.
படைத்தல் என்பதன் பொருள்.
நூல் ஆய்வுக் கட்டுரை.
முஹிய்யுத்தீனிய சன்னிதானம்
பல்லக்கு தம்பி வலிய்யுல்லாஹ்
சற்குரு சரித்திரம்
பொறுமை காத்த பருவமழை.
அபூஹுரைரா (ரலி)
அறபு இலக்கிய வளர்ச்சி
மற்றும் தொடர்கள்.

# சாதனை மனிதனா? சாதாரண மனிதனா?

உலகில் தினமும் சூரியன் வருகிறது. நிலவு எழுகிறது. நாட்கள் மலர்கின்றன.

காலை விடிந்ததிலிருந்து இரவுவரை மனிதர்கள் அனைவரையும் ஒரே மாதிரியான மணித்துளிகள்தான் கடந்து செல்கின்றன.

இரவு உறங்கச் செல்லுமுன் ஒருமிடம் திரும்பிப்பார்த்தால், சிலருக்கு அந்நாள் சாதனை நாளாகவும், சிலருக்கு சாதாரண நாளாகவும் கடந்துபோயிருக்கிறது.

ஒவ்வாரு நாளும் பகல் எனும் வெள்ளைக் காகிதத்தை இறைவன் அனைவருக்கும் ஒரே மாதிரியே தருகிறான்.

ஒருசிலர், அதில் அழகிய கவிதை எழுதி விடுகிறார்கள், ஒரு சிலர் அழகிய ஓவியம் வரைந்து விடுகிறார்கள். ஒருசிலர் காவியமே வடித்துவிடுகிறார்கள்.

ஆனால் ஒருசிலர், காலையில் கொடுத்த வெள்ளைத்தாளை அப்படியே அழுக்குப்படாமல் பத்திரமாக இயற்கையிடம் ஒப்படைக்கிறார்கள்.

கவிதை எழுதியவர்கள், ஓவியம் வரைந்தவர்கள், காவியம் வடித்தவர்கள் இயற்கையின் பாராட்டைப்பெறுவதோடு புதிய புதிய பரிசுகளுக்கும் பாத்திரமானவர்களாகிவிடுகிறார்கள்.

அவர்களை மற்றவர்களுக்குப் பாடமாக இறைவன் ஆக்கிவிடுகிறான்.

அவர்களது வாழ்க்கையை உலக மனிதர்கள் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள்.

அன்பர்களே!

நம்மைக் கடந்து சென்ற 2024 ஆம் ஆண்டு வெள்ளைத்தாளாகவே திரும்பிப்போனதா? அல்லது அதில் ஏதாவது எழுதியிருந்தோமா? என்பது அவரவர் மனச்சாட்சிக்கே புரியும்.

பேனது போகட்டும்!

மலர்ந்திருக்கும் 2025 ஆம் ஆண்டையாவது முறையாகப் பயன்படுத்தி சாதனை மனிதர்களாக மாறுவோம். அல்லாஹ் அதற்குப் பேரருள் புரிவானாக!

---

**வாசக நேசர்களுக்கு ஆங்கிலப் புத்தாண்டு நல் வாழ்த்துகள்!**

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



பைஅத்தின்போது சில கட்டளைகளைக் கூறினோம். ஐந்து நேரத் தொழுகைகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறினோம். அதிலும் பள்ளிவாசலுக்குச் சென்று தான் தொழ வேண்டும் என்று கூடக் கூறவில்லை. பள்ளிவாசலுக்குச் செல்ல முடியாவிட்டாலும் வீட்டிலேயே தொழுது கொள்ளலாம் என்று கூறினோம். கூடுமானவரை தொழுகையில் “களா” இல்லாமல் இருக்க வேண்டும் என்று கூறினோம். தவிர்க்க முடியாத காரணங்களால் “களா”வாகி விட்டால் அதனை எப்படியும் நிறைவேற்றிவிட வேண்டும் என்றும் கூறினோம்.

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

*இந்திய முதல் விஜயம்*

■ 1966இல் தான் நாம் முதன்முதலாக இந்தியா வந்தோம். அதுவும் தந்தை நாயகம் அவர்களின் 40ஆம் நாள் பாத்திஹா ஜியாரத்திற்காக வந்தோம். நாம் முதலில் இங்கு பிள்ளை சிராஜையே சந்தித்தோம். பின்னர் டாக்டர். பத்ருத்தீன் அவர்கள் இல்லத்திலிருந்து காரில் திருமுல்லைவாசலுக்குச் சென்றோம்.

நமது தலைமை கலீபா (மர்ஹூம் அப்துல் கறிம் ஜமாலி) அவர்கள் எம்மை சென்னை அழைத்துச் சென்று “விசா” எடுத்துக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அப்போது என்ன காரணத்தாலோ நம்மை அடிக்கடி இந்தியாவிற்கு வரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர், இடையிடையே நமது தந்தை நாயகத்தின் ஜியாரத்திற்காக நாம் இந்தியா வரத் தொடங்கினோம்.

நாம் ஓர் அரசு ஊழியனாகப் பணியாற்றிக் கொண்டிருந்ததால் அடிக்கடி விடுப்பு (லீவு) எடுத்து வருவது சிரமமாக இருந்தது.

ஆனால், ஒவ்வொரு வருடமும் அவசியம் வரவேண்டும் என கலீபா அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இந்தியா வரத் தொடங்கினோம்.

முதன்முதலில் தவ்ஹீதைப் பழகியவர்கள் திண்டுக்கல்லைச் சேர்ந்தவர்கள்தாம். ஆரம்பத்தில் பிள்ளை காஜா போன்றவர்கள் தவ்ஹீதை விளங்க ஆரம்பித்தார்கள்.

1991-வரை நடந்த (நிகழ்ச்சிகளைத்தான்) விஷயங்களைத்தான் இதுவரை கூறினோம்.

■ பிறை 14 இல் நடைபெறும் ராத்திபிலும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். மாதத்திற்கு ஒருமுறை நடைபெறும் ஞான சபைக் கூட்டத்திற்கு அனைவரும் விஜயம் தர வேண்டும். நம் பிள்ளைகளிடையே அன்பும் நட்பும் வளர வேண்டும் என்பதற்காகவே நாம் இவ்வாறு மாதாந்தக் கூட்டத்தினை ஒழுங்குபடுத்தினோம்.

***– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –***

## கொய்த மலர்



# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

**(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)**

وَلَوْ اَنَّهُمْ اٰمَنُوْا وَاتَّقَوْا لَمَثُوْبَةٌ مِّنْ عِنْدِ اللّٰهِ خَيْرٌ ؕ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ۠ ١٠٣

அவர்கள் ஈமான் கொண்டு (மாயாஜாலத்திலிருந்து) தம்மைப் பாதுகாத்துக் கொண்டால் அல்லாஹ்விடத்திலிருந்து (அவர்களுக்குக் கிடைக்கவிருக்கும்) கைம்மாறு மிக நல்லது. அவர்கள் அறிந்திருந்தாலும் சரியே.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَقُوْلُوْا رَاعِنَا وَقُوْلُوا انْظُرْنَا وَاسْمَعُوْا ؕ
(25) وَلِلْكٰفِرِيْنَ عَذَابٌ اَلِيْمٌ ۠ ١٠٤

ஈமான் கொண்டவர்களே, (கண்மணி நாயகம்) ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு "ராஇனா" எனச் சொல்லாதீர்கள். "உன்ளுர்னா" எனக் கூறுங்கள். இன்னும் நீங்கள் நாம் சொல்வதற்குக் காது தாழ்த்துங்கள். மறுப்பாளர்களுக்கு மிக்க வருத்தம் கொடுக்கும் வேதனையுண்டு.

مَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ اَهْلِ الْكِتٰبِ وَلَا الْمُشْرِكِيْنَ اَنْ يُّنَزَّلَ
(26) عَلَيْكُمْ مِّنْ خَيْرٍ مِّنْ رَّبِّكُمْ ؕ

ஈமானுடையோரே, வேதத்தையுடையவர்களினின்றுமுள்ள மறுப்பாளர்களும் இணைவைப்போரும், உங்களுக்கு உங்கள் இறைவனிடத்திருந்து இறக்கப்படுகின்ற மிகச் சிறப்பானவைகளை விரும்புகின்றார்களில்லை.

وَاللّٰهُ يَخْتَصُّ بِرَحْمَتِهٖ مَنْ يَّشَآءُ ؕ

அல்லாஹ் அவன் விரும்பியவர்களுக்கு அவனுடைய கிருபை அல்லது தயையை சொந்தமாக்குவான்.

وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ۠ ١٠٥

அல்லாஹ் மிகச் சிறப்புடையோனாவான்.

مَا نَنْسَخْ مِنْ اٰيَةٍ اَوْ نُنْسِهَا نَاْتِ بِخَيْرٍ مِّنْهَآ اَوْ مِثْلِهَا ؕ

திருமறை வசனத்தினின்றும் (எதையேனும்) நாம் மாற்றினோமானால் அன்றேல் அதை மறக்க வைத்தோமானால் அதனின்றும் நல்லதை அன்றேல் அதே போன்றதை நாம் கொணர்வோம்.

اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَیْءٍ قَدِيْرٌ ۝ ١٠٦

நிச்சயமாகவே அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் சக்தி பொருந்தியவன் என்பதை நீங்கள் அறிய வில்லையா? (நீங்கள் : நீர்)

اَلَمْ تَعْلَمْ اَنَّ اللّٰهَ لَهٗ مُلْكُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ

நிச்சயமாக வானங்களினுடையயும் பூமியினதும் ஆட்சி அல்லாஹுவுக்குரியது என்பதை நீங்கள் அறிய வில்லையா?

وَمَا لَكُمْ مِّنْ دُوْنِ اللّٰهِ مِنْ وَّلِيٍّ وَّلَا نَصِيْرٍ ۝ ١٠٧

பாதுகாவலினின்றும் உதவியாளனின்றும் அல்லாஹுவேயன்றி (வேறொருவனும்) உங்களுக்கில்லை.

اَمْ تُرِيْدُوْنَ اَنْ تَسْـَٔلُوْا رَسُوْلَكُمْ كَمَا سُئِلَ مُوْسٰى مِنْ قَبْلُ ؕ

இதற்கு முன்னால் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் கேட்கப்பட்டது போல் நீங்களும் உங்கள் தூதுவர் அவர்களிடம் கேட்கிறதை விரும்புகிறீர்களா?

وَمَنْ يَّتَبَدَّلِ الْكُفْرَ بِالْاِيْمَانِ فَقَدْ ضَلَّ سَوَآءَ السَّبِيْلِ ۝ ١٠٨

விசுவாசத்தை எவன் மறுப்பின்பக்கம் மாற்றிக் கொண்டானோ அவன் நிச்சயமாக சரியான பாதையைவிட்டும் தவறிவிட்டான்.

---

(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)

103. ஆகவே, அவர்கள்(இவ்வேதத்தை) நம்பிக்கை கொண்டு, (அச்சூனியங்களை விட்டு) விலகிக்கொண்டால் (அவர்களுக்கு) அல்லாஹ்விடம் கிடைக்கும் சன்மானம் நிச்சயமாக மிக மேலானதாயிருக்கும்.(இதை) அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமே.

104. நம்பிக்கையாளர்களே. நீங்கள் (நபியை நோக்கி ) 'ராயினா' எனக் கூறாதீர்கள். (அதற்குப பதிலாக எங்களைப் பாருங்கள் எனப் பொருள்தரும்) 'உன்ளுர்னா' எனக் கூறுங்கள்.(மேலும் நபி கூறுவதை முழுமையாகச்) செவிமடுங்கள். (அதற்கு மாறாகக் கூறும்) நிராகரிப்பவர்களுக்கு மிகத் துன்புறுத்தும் வேதனையுண்டு.

105. (நம்பிக்கையாளர்களே!) வேதத்தையுடையவர்களிலும் இணைவைத்து வணங்குபவர்களிலும் உள்ள (இவ்வேதத்தை) நிராகரிப்பவர்கள் (தங்களிடம் உள்ளதைவிட) சிறந்த ஒன்று உங்கள் இறைவனால் உங்கள் மீது அருளப்படுவதை விரும்பவே மாட்டார்கள். ஆனால் அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்குத் தன் கருணையை சொந்தமாக்கிவிடுகின்றான். அல்லாஹ் மகத்தான அருளுடையவன் ஆவான்.

106. நபியே! ஒரு வசனத்தை நாம் மாற்றினாலும் அல்லது அதை மறக்கடித்தாலும் அதற்கு ஒப்பானதை அல்லது அதைவிடச் சிறந்ததை நாம் கொண்டுவருவோம். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் நிச்சயமாக பேராற்றலுடையவன் என்பதை நீர் அறியவில்லையா?

107. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது என்பதை அறியவில்லையா? (நம்பிக்கையாளர்களே, அல்லாஹ்வைத்தவிர உங்களுக்குப் பாதுகாவலனும் இல்லை, உதவி செய்பவனும் இல்லை.

108. (நம்பிக்கையாளர்களே!இதற்கு முன்னர் மூஸாவிடம் (அவருடைய மக்கள் வீணான கேள்விகளைக்) கேட்டதைப்போல் நீங்களும் உங்களுக்கு அனுப்பப்பட்ட தூதரிடம் கேட்க விரும்புகிறீர்களா? எவர் (இத்தகைய கேள்விகளைக் கேட்டு) தன் நம்பிக்கையை நிராகரிப்பைக் கொண்டு மாற்றிக் கொள்கிறாரோ அவர் நேரான வழியை விட்டு மெய்யாகவே தவறிவிட்டார்.

---

*நமது உயிரினும் மேலான வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அழீம் அவர்களின் முதலாமாண்டு கந்தூரியை முன்னிட்டு மதுக்கூர் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பாக 24.12.2024 செவ்வாய்க் கிழமை பகல் கந்தூரி உணவு சுமார் 1200 பொட்டலங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு ஆத்ம சகோதரர்களால் வீடுகள்தோறும் நேரடியாகவே வழங்கப்பட்டது. இதில் ஜமாஅத்தார்கள் , பொதுமக்கள் மற்றும் சகோதர மதத்தைச் சார்ந்த சகோதரர்களும் பயன் பெற்றனர்.. வஸ்ஸலாம்*

(தகவல்: Er. A. இத்ரீஸ் ஹக்கிய்யுல் காதிரிய் , இணைச்செயலாளர், மதுக்கூர்)



21.12. 2024 சனிக்கிழமை, சங்கைமிகு குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் உஜ்த் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யில் ஹாஷிமிய் நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் முதலாம் ஆண்டு கந்தூரிவிழாவின்போது, திருச்சி தர்ஹா ஷரீபில் அவர்களின் திருப்பேரர், சங்கைமிகு ஷைகுனா, ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யில் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் தலைமையில் மவ்லிது ஷரீப் மஜ்லிஸ் திருக்காட்சி.

---

**வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்து விட்டீர்களா?**

**மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A.**
**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255. IFSC Code.IOBA 0002098 Branch- RM COLONY. DINDIGUL.**

# திருக்குறள்

**மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்**
**ஊறுபா டில்லை உயிர்க்கு (945)**

உடலுக்கு மாறுபாட்டைச் செய்யாத உணவையும், தன்மனம் விரும்பியபடி அல்லாமல் நோய் வராத அளவினாலே உண்பானானால் அவனுக்குப் பிணிகளால் துன்பமில்லை.

---

**பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்**
**எச்சிற் கிமையாது பார்த்திருக்கும் அச்சீர்**
**பெருமை யுடைத்தாக் கொளினுங் கீழ்செய்யும்**
**கருமங்கள் வேறுபடும்.** *(நாலடியார்)*

பொன்கலத்திலே உணவிட்டு ஊட்டிக் காப்பாற்றினாலும் நாயானது பிறரது எச்சிற் சோற்றுக்காக இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் அத்தன்மை போல, கீழ் மக்களைப் பெருமையுடைவராக நடத்தினாலும், அவர்கள் செய்யும் செயல்கள் தாழ்ந்து வேறுபடும். (345)

---

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

பிறை

**ஜமாதுல் அவ்வல்**

| | |
|---|---|
| 1. | சம்பைப்பட்டினம் ஜமாலிய்யா மௌலானா (ரலி) கந்தூரி |
| 17 | பதிவுத்தீன் ஸிந்தா மதார் (ரலி) மறைவு |
| 22 | அஹ்மது கபீர் ரிஃபாயி (ரலி) மறைவு |
| 25 | கீழக்கரை மஹானந்த பாபா (ரலி) கந்தூரி |
| 29 | காலித் இப்னு வலீத் (ரலி) மறைவு |

**ஜமாதுல் ஆகிர்**

| | |
|---|---|
| 5 | மௌலானா ரூமி (ரஹ்) மறைவு |
| 2 | கம்பம் அம்பா நாயகம் கந்தூரி |
| 10 | நாகூர் ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) கந்தூரி |
| 14 | இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) மறைவு |
| 17 | காயிதே மில்லத் (ரஹ்) மறைவு |
| 22 | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) மறைவு |

**மறைஞானப் பேழை சந்தா செலுத்திவிட்டீர்களா?**

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



இப்னு தைமியா அல்லாஹ்வுக்கு உடல் இருக்கின்றது என்று சொன்னான். இப்னு வஹாப் என்பவனும், அவனைத் தொடர்ந்த அடிவருடிகள் சொல்வதும் இதைத்தான். அல்லாஹ் வானத்தில் இருக்கிறான் என்பதன் பொருள் அல்லாஹ் பரந்து விரிந்து உயர்ந்து எப்படியெனச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறான் என்ற கருத்துதான் அங்கு சொல்லப்படுகின்றது. அதை இவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழ் – அறபி புத்தகங்களை வாசித்து விட்டு வந்து ஞானம் பேசுகிறவர்கள் இருக்கின்றார்கள். வஹ்ததுல் வுஜூது என்றால், அது அப்படி, அப்படியல்ல இப்படி, இப்படியல்ல அப்படி எனக் கண்டபடி பேசக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். கிதாபை வாசித்து விட்டால், எல்லாமே தெரியும் என அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், சரியான நேரத்தில் அவர்கள் அகப்பட்டு விடுவார்கள். கிதாபைப் பார்த்துத் தெளிந்து விட முடியாது.

பெரிய பெரிய கிதாபுகள் இருக்கின்றன, இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இயற்றிய நிறைய கிதாபுகள் இருக்கின்றன, குறிப்பாக இன்ஸானுல் காமில் இருக்கிறது, துஹ்பதுல் முர்ஸலா இருக்கிறது. இவற்றையெல்லாம் படித்தால் மட்டும் ஒரு முடிவுக்கு வந்து விடமுடியுமா?

சிலபேர் தலைக்குள் நிறைய வைத்துக்கொண்டு வருகிறார்கள். தட்டுத்தட்டாக தலைக்குள் வைத்துக் கொண்டு வருகிறார்கள். அந்த கிதாபில் வாசித்தது, இந்த கிதாபில் படித்தது, இன்னொன்றில் தெரிந்தது கொஞ்சம், குர்ஆன் தர்ஜுமாவிலிருந்து தெரிந்தது கொஞ்சம் என இப்படி தட்டுத்தட்டாகக் கொண்டு வந்து பேசுகிறார்கள். ஆனால், அவர்களின் பேச்சில் விஷயம் ஒன்றுமில்லை. இவர்களிடம் அல்லாஹ்வை விளங்கப்படுத்தினால் அவர்களுக்குத் தெரியுமா? விளங்கி விடுமா?

# அமுத மொழிகள்

அல்லாஹ்வைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில் அல்லாஹ் எங்கும் நிறைந்து இருக்கின்றான், எதிலிருந்தும் நீங்காமல் இருக்கிறான், நீக்கமறக் கலந்து இருக்கிறான் என்று சொல்ல வேண்டும்.

பஞ்ச பூதங்கள் அப்படி அப்படியே ஆனவைதாம். முழுமையான, தென்படாத ஒன்றுமேயில்லா அமா என்ற நிலையில், குறிப்பில்லாமல், இதுதான் என்று குறிப்பில்லாமல் இருந்தது. நாங்கள், நீங்கள் என்பது அந்த நேரத்தில் தெரியாது, இப்போது குறிப்புணர முடிகிறது.

பஞ்ச பூதங்கள் எப்படி வந்தது என்றால்Univers பிரபஞ்சத்தில் இருந்து ஆயின. பிரபஞ்சத்துக்கு மேல் வேறு ஏதேனும் இருக்கின்றதா? பிரபஞ்சத்துக்கு மேலாக என்று சொல்ல என்ன இருக்கின்றது? எல்லாமே பிரபஞ்சமாக இருக்கும் நேரத்தில், அதற்கு வலது, இடது, கீழ், மேல் பகுதிகள் என்று சொல்ல ஏதாவது இருக்கின்றதா?

கடலைப் பாருங்கள்! எல்லா அசுத்தங்களும் கடலில் கலக்கின்றன. அப்போதும் கடல் சுத்தமாகத்தான் இருக்கின்றது. அங்கே சென்றால் எப்போது வேண்டுமானாலும் ஒளுவெடுத்து வரலாம். அது சுத்தமான தண்ணீர் (மாஉன் முத்தலக்). எவ்வளவு நஜீஸ் அதில் புகுந்தாலும் அது சுத்தமாகத்தான் இருக்கிறது. அதேபோல், அவனில் எது இருந்தாலும் அவன் சுத்தமாகத்தான் இருக்கிறான். அதனால்தான் அவனை சுப்ஹானஹுதஆலா என்கிறோம். பரிசுத்தமான அல்லாஹ் என்கிறோம்.

பிரபஞ்சம் விளையாட்டல்ல. வார்த்தைதான் வித்தியாசம். இந்த வார்த்தையைச் சொன்னால், வேறு மாதிரி நினைப்பார்கள். ஆனால், உண்மையைச் சொல்ல வேண்டும். விளங்கிக் கொள்வதற்காகத்தான் இவ்வளவு விஷயங்களையும் சொல்கின்றோம். இவ்வளவு காலம் இந்த விஷயத்தை இந்த மாதிரி சொல்லவில்லை. ஏனென்றால், நீங்கள் இதைக் கேட்கின்ற நேரத்தில் உங்கள் நிலைமை எப்படிப் போகுமோ தெரியாது என்ற காரணத்தால்தான்.

அல்லாஹ் வானத்திலிருந்து தரைக்கு இப்படித்தான் இறங்குகிறான் என இப்னு தைமியா மிம்பரில் இருந்து இறங்கிக் காட்டினான். எவ்வளவு பெரிய முஷ்ரிக்? அவன் அல்லாஹ்வா? அவன் அல்லாஹ்வாகி இறங்கிக் காட்டினான். இவ்வளவு பெரிய பிரபஞ்சமாக இருக்கும்போது, அல்லாஹ் அப்படி ஆக முடியுமா? இப்னு தைமியாவின் மூளை எங்கே போயிருக்கிறது பார்த்தீர்களா? அவனுக்கு விளக்கமில்லையே? ஒன்றுமே தெரியாதே?

# அமுத மொழிகள்

வஹ்ததுல் வுஜூதுதான் உண்மையானது. அல்லாஹ்வைப்பற்றி அறிவதென்றால் வஹ்ததுல் வுஜூதில்தான் அறிய வேண்டும். வஹ்ததுல் வுஜூது இல்லாமல் அல்லாஹ்வைப் பற்றி விளங்குமா? எத்தனை திக்ரு செய்தாலும் அல்லாஹ் அறிய முடியுமா? திக்ரு செய்வதைக் கொண்டு உங்கள் மனதைத் திருப்திப் படுத்தலாம். ஆனால், அறிவைக் கொண்டுதான் அல்லாஹ்வை அறிய வேண்டும்.

இன்று நஞ்சு சேர்ந்த உணவைச் சாப்பிட்டு, குழந்தை இல்லை – குழந்தை இல்லை எனக் கஷ்டப்படுகிறார்கள். கவலைப்படாதீர்கள். குழந்தை இல்லாத முரீதுப்பிள்ளைகள் எல்லாருக்கும் அல்லாஹ் கொடுப்பான்.

நாம் அல்லாஹ்வைத் தொழுகின்றோம். ஏன் தொழுகின்றோம்? அல்லாஹ் தொழச் சொல்லியிருக்கின்றான். அதனால் தொழுகின்றோம். அல்லாஹ் ஏன் தொழச் சொல்லியிருக்கின்றான்? விளையாட்டுக்கா? தொழுவதென்ன விளையாட்டா? அப்படியல்ல, பிரபஞ்சத்திலிருந்து தொழுபவனுக்கு நன்மையிருக்கின்றது. நன்மையிருப்பதால்தான் தொழச் சொல்லியிருக்கின்றான். குர்ஆன் ஓதச் சொல்லியிருக்கின்றான்.

பொய் – புரட்டு இருப்பவர்களிடம் ஞானம் இருக்காது. ஞானம் இருப்பவர்களிம், பொய், புரட்டு, மற்றவர்களை ஏமாற்ற வேண்டும், இழிவுபடுத்த வேண்டும், நாசப்படுத்த வேண்டும் போன்ற எண்ணங்கள் வராது.

Scince -இல் Big Burn Theory என்று சொல்வார்கள். ஏதோ ஒரு பொருள் Burst ஆகி அது தான் பிரபஞ்சம் ஆனது என்கிறார்கள். அப்படியானால், அந்தப் பொருள் எங்கிருந்தது? பிரபஞ்சத்திற்கு அப்பால் என எதுவும் உள்ளதா? ஆகவே, எல்லா Scince விஷயங்களையும் சரியென நினைத்துக் கொள்ள வேண்டாம். அதனால்தான், எல்லா Scince விஷயங்களிலும் உண்மை இருக்காது என்பதாக கஜ்ஜாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொன்னார்கள். விளங்கினவர்கள் கூட சில இடங்களில் திண்டாடிப் போகிறார்கள்.

பிரபஞ்சத்தைப் பற்றி நாமே சிந்திக்க வேண்டும். மற்றவர்களுடைய Theory நமக்குத் தேவையில்லை. அல்லாஹ் நமக்கு மூளையைத் தந்துள்ளான். அதைக்கொண்டு நாம் சிந்திப்போம். அவர்களைக் கூடுதலாக எங்களுக்கு Scince தெரியும். ஏனென்றால், அவர்கள் அல்லாஹ் இல்லை என்கிறார்கள். நாங்கள் அல்லாஹ் இருக்கிறான் எனச் சொல்கிறோம், எங்கே இருக்கிறான்? நீ இல்லை என்று சொல்வதில்தான் இருக்கிறான். ஆக எங்களுடைய Scince கூடுதலானது, சரியானது. இவ்வாறு சிந்தித்துச் சரியான இடத்துக்கு வந்து விடுகிறோம்.

படித்தேன்
பகர்கிறேன்.

உள்ளம் கவரும்

(கலீபா. ஆலிம் புலவர்)

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**உண்டுடுத் தின்புற வோங்கிவாழ் மக்களூர்**
**விண்புக ழெட்டுமே வீழாது - மண்செழிக்கும்**
**மன்னுயர்வான் மாண்புறுவான் மாநிலத்தே அன்னார்க்கு**
**இன்னா ரிராரே யிகத்து.**

## பொருள் :

உண்டு உடுத்து இன்புற உயர்ந்து மக்கள் வாழும் ஊரினது புகழானது விண்ணை எட்டும். புகழ் வீழாது ( குறையாது) மண்ணுஞ் செழிக்கும். மன்னனும் உயர்வான். மன்னன் மாட்சிமை பொருந்தியவனாவான். மாநிலந்தன்னில் அத்தகையாருக்குப் பகைவர் இருக்க மாட்டார்.

## குறிப்பு:

ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான இலக்கணத்தை " உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு" என திருவள்ளுவர் சொல்வார்.

பசியும் நோயும் பகையும் இருந்தால் நாட்டு மக்கள் துன்பத்தில் உழன்று நிம்மதியில்லாமல் வாழ்வர். அதற்கு நேர்மாறாக வேளாவேளைக்கு சாப்பிட்டு, வேண்டும் அளவு அழகழகாய் உடை உடுத்தி, அதனால் நிம்மதிபெற்று இன்பமாக வாழும் மக்கள் இருந்தால் அந்நாடு பிற நாட்டு மக்களால் பாராட்டப்படும்.

தற்காலத்தில் மக்கள் நிம்மதியாக வாழும் நாடு எதுவென ஆராய்ந்து பட்டியல் வெளியிகின்றார்கள் அல்லவா? அத்தகைய நாட்டின் புகழ் வளர்ந்த கொண்டே போகும். மக்களின் இந்த இன்ப வாழ்வுக்கு வழி வகுத்த அரசனும் புகழால் உயர்ந்து சிறப்புப் பெறுவான். இத்தகைய நல்லாட்சி தரும் மன்னனுக்கு எதிரிகளே இல்லாமல் போகும். மதிப்புடைய மன்னனுக்கும் நாட்டுக்கும் நட்புகள் தாமாகவே வந்து சேரும்.

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா

# அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மவுலானா

அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்
(கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின்

# முதலாம் ஆண்டு

# கந்தூரி – ஜியாரத் உ ரூஸ் விழா

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34 ஆம் தலைமுறைத் திருப்பேரரும், முத்தமிழ் மெய்ஞ்ஞானியும், வாப்பா நாயகம் என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற, குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் **கலீல் அவ்ன் மவுலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களின் **முதலாம் ஆண்டு கந்தூரி சந்தனக்கூடு உரூஸ் விழா,** திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி வளாகத்தில் அமையப்பெற்றுள்ள சங்கைக்குரிய வாப்பா நாயகம் தர்கா ஷரீஃபில், இன்று (21.12.2024) சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

விழாவுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 36 ஆம் தலைமுறைப் பேரரும் ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி தலைவருமான **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மவுலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அஹ்லுல்பைத் திருக்குடும்பத்தார், மௌலானாமார்கள், தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா கலீபாக்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவரும் பாராளுமன்ற மேனாள் உறுப்பினருமான பேராசிரியர் கே.எம். காதர் மைதீன் அவர்கள், பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளரும் தமிழ் உரிமைச் செயற்பாட்டாளருமான பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள், சுன்னத் ஜமாஅத் பேரியக்கத் தலைவரும் மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி ஆலோசகருமான அபுத்தலாயில் அபுல் பயான், முனைவர் மௌலவி அல்ஹாஃபிழ். எம். ஷைகு அப்துல்லா ஜமாலி ஹள்ரத் அவர்கள், தினத்தந்தி அறிவியல் அதிசயம் கட்டுரையாளர் இன்ஜினீயர் வெள்ளம்ஜீ கலீபா முனைவர். முஹம்மது இக்பால் அவர்கள், கூத்தாநல்லூர் ஜாமிஆ அஷ்ஷஜரத்துன் தய்யிபா

பீ தஃவத்துல் இஸ்லாமிய்யா பெண்கள் அறபுக்கல்லூரி நிறுவனர் – முதல்வர் ஷர்புத்தீன் பைஜீ ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், பிரபல இஸ்லாமியப் பாடகர் அபுல் பரக்காத் அவர்கள், இஸ்லாமிய எழுத்தாளர் ரஹ்மத் ராஜகுமாரன் அவர்கள், மணிச்சுடர் செய்தியாளர் சாகுல் ஹமீது அவர்கள் மற்றும் பலர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். கடந்த 11.12.2024 புதன்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கிய கந்தூரி விழா, இன்று (21.12.2024) சனிக்கிழமை, ராத்திபதுல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா என்னும் திக்ர் மஜ்லிஸ் மற்றும் பிரார்த்தனை களுடன் நிறைவு பெற்றது.

விழாவின் அடுத்த நிகழ்ச்சியாக, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் தயார் செய்யப்பட்டு, ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை வெளியீடாக, **சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் ஒப்பற்ற தமிழ்த் தொண்டைப் பறைசாற்றும் “நினைவுக் களஞ்சியம்”** சிறப்பு மலர், அருமை வாப்பா நாயகம் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மவுலானா அல்ஹஸனியுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது.

சிறப்புக்குரிய முதல் பிரதிகளை, சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸய்யித் ஸாஜித் அலி மௌலானா அவர்களும், சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸய்யித் வாரிஸ் அலி மௌலானா அவர்களும், சங்கைமிகு அஸ்ஸய்யித் ஸாஹித் அலவி மௌலானா அவர்களும், திருமுல்லைவாசல் சங்கைமிகு அஸ்ஸய்யித் சைய்யத் அலி மௌலானா அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

அடுத்த பிரதிகளை, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவரும் பாராளுமன்ற மேனாள் உறுப்பினருமான பேராசிரியர் கே.எம். காதர் மைதீன் அவர்களும், சுன்னத் ஜமாஅத் பேரியக்கத் தலைவரும் மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி ஆலோசகருமான அபுத்தலாயில் அபுல் பயான், முனைவர் மௌலவி அல்ஹாஃபிழ். எம். ஷைகு அப்துல்லா ஜமாலி ஹள்ரத் அவர்களும், பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளரும் தமிழ் உரிமைச் செயற்பாட்டாளருமான பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் ஐயா அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

அடுத்த பிரதிகளை, ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்க இணைச்செயலாளர் ஷர்புத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும், துபை கே.எஸ்.ஏ.ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும், சிங்கப்பூர் அப்துல் சுபஹான் ஹக்கிய்யுல்

காதிரிய் அவர்களும், ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை இந்தியத் தலைவர் கலீபா ஆலிம்புலவர் மௌலவி எஸ். ஹுஸைன் முஹம்மது மன்பஈ ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும், ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கச் செயலாளர் கவிஞர் கிளியனூர் இஸ்மத் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் திருச்சி துவாக்குடி பாசன மேலாண்மை பயிற்சி நிலைய நூலகர் இளங்கவி அ.நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள். நினைவுக்களஞ்சிய வெளியீட்டு நிகழ்ச்சியை 'நான் மீடியா' RJ நாகா அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவரும் பாராளுமன்ற மேனாள் உறுப்பினருமான பேராசிரியர் கே.எம். காதர் மைதீன் அவர்களும், பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளரும் தமிழ் உரிமைச் செயற்பாட்டாளருமான பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் ஐயா அவர்களும், சுன்னத் ஜமாஅத் பேரியக்கத் தலைவரும் மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி ஆலோசகருமான அபுத்தலாயில் அபுல் பயான், முனைவர் மௌலவி அல்ஹாஃபிழ். எம். ஷைகு அப்துல்லா ஜமாலி ஹள்ரத் அவர்களும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் அஹ்லுல் பைத் சிறப்புகள், தமிழ்த்தொண்டு, மெய்ஞ்ஞானப் புரட்சி, பன்முக ஆளுமை உள்ளிட்ட பொருண்மைகளில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியின் அடுத்த நிகழ்வாக, புனித கந்தூரி உலகம் தழுவிய மெய்ஞ்ஞான வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. **சங்கைக்குரிய வாப்பா நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மவுலானா அல்ஹஸனியுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் திருக்கரங்களால், **முதல் பரிசுத் தொகை ரூ.15,000/-** மற்றும் வெற்றிச் சான்றிதழை **திண்டுக்கல் K. நஸீமா ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் சார்பில் அவரது கணவரும், **இரண்டாம் பரிசுத் தொகை ரூ.10,000/-** மற்றும் வெற்றிச் சான்றிதழை **திண்டுக்கல் S. மதீஹ் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களும், **மூன்றாம் பரிசுத் தொகை ரூ.5,000/-** மற்றும் வெற்றிச் சான்றிதழை **திருச்சி அ.நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களும் நன்றியுடன் பெற்றுக்கொண்டனர். வினாடி வினா போட்டி பரிசளிப்பு நிகழ்ச்சியை ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை குளோபல் தலைவர் முனைவர் **கலீபா இன்ஜினீயர் சஹாபுதீன் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

முன்னதாக, வாப்பா நாயகம் அவர்களின் புனித தர்கா கட்டடத்திற்கு, **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மவுலானா அல்ஹஸனியுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

விழாவில், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, துபை, குவைத், கத்தார், சவூதி அரேபியா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்தும், திருச்சி, திண்டுக்கல், மதுக்கூர், சென்னை, ஈரோடு, பெரம்பலூர், மதுரை, மேலூர், பெரம்பலூர், மன்னார்குடி, பேராவூரணி, தஞ்சாவூர், வழுத்தூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான சீடர்கள், பக்தர்கள், அன்பர்கள், மார்க்க அறிஞர்கள், ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், யாஸீனிய் மவுலவிகள் பேரவை மவுலவிமார்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், உலக அமைதிக்காகவும் மனித நேயம் தழைக்கவும் சமய நல்லிணக்கம் மேம்படவும் உலக மக்கள் யாவரும் ஒரே உள்ளமை தத்துவத்தை உணர்ந்து ஒருமைப்பாட்டுடன் வாழ்வும், பசி, பணி நீங்கி சுபிட்சம் நிலைக்கவும் பிரார்த்திக்கப்பட்டது.

நிறைவாக, கலந்து கொண்ட அனைவருக்கும் சுற்றுவட்டாரப் பொது மக்களுக்கும் சிறப்பான கந்தூரி உணவு அன்னதானம் வழங்கி பரிமாறப்பட்டது.

விழாவுக்கான ஏற்பாடுகளை கலீபா சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய், கலீபா ஏ.என்.எம்.லியாகத் அலி ஹக்கிய்யுல் காதிரிய், துபை ஷாஜகான் ஹக்கிய்யுல் காதிரிய், சென்னை ஹைதர் நிஜாம் ஹக்கிய்யுல் காதிரிய், அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை செயலாளர் தவ்லத் ஹக்கிய்யுல் காதிரிய், ஆழியூர் கபீர் ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை பொருளாளர் காஜா மைதீன் ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி பக்ருத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை செயலாளர் யாஸீன், ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி நாழிர் ஹழ்ரத் என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய், முதல்வர் திரு.கார்த்திக், முஹம்மது அலி ஹக்கிய்யுல் காதிரிய், மெய்ஞ்ஞான இளைஞர் அணியினர், யாஸீனிய் மௌலவி பேரவையினர் உள்ளிட்ட விழாக்குழுவினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தகவல் : அ.நை.மு. அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், திருச்சி.

# கலீல் நாதர் ஞானக்கொடி ஏற்றுவோம்!

கொடியெல்லாம் நல்ல கொடியல்ல – கொள்கைக்
கொடிகளே என்றும் உயர்வு
அழகெல்லாம் இங்கே அழகல்ல – வலிமார்
தர்ஹா கொடிகளே அழகு.

அல்லாஹ் இரஸூலைப் போற்றுவோம்
அவ்லியா அஹ்லபைத்தை வாழ்த்துவோம்
முஹிய்யுத்தீனின் பேரர் யாஸீன் எங்கள் நாதர் – தந்த
கலீல் நாதர் ஞானக்கொடி ஏற்றுவோம் (அல்லாஹ்)

ஆதம்நபி ஏந்திவந்த திக்கொடி–அமரர்
ஜிபுரயீலின் வஹீயில் தோய்ந்த பொற்கொடி
நபிமார் கையில் உயர்த்திப் பிடித்த திக்கொடி– தூய
கலிமா தன்னை முழங்கும் மந்திரக் கொடி
தீனின் கொடியேற்றுவோம்– ஞான
ஒளி யேற்றுவோம்– தானே
தனக்குள்ளே பார்க்கின்ற விழி கூட்டுவோம் (அல்லாஹ்)

இறுதித் தூதர் தைத்துத் தந்த திக்கொடி – எங்கள்
இமாம் ஹஸன் ஹுஸைன்அலி யாரின் கொடி
இப்னு அறபி மன்ஸூர்ஹல்லா ஜின் கொடி– என்றும்
இடைவிடாமல் பறந்ததிந்தப் பூங்கொடி
தீனின் கொடியேற்றுவோம்– ஞான
ஒளி யேற்றுவோம்– தானே
தனக்குள்ளே பார்க்கின்ற விழி கூட்டுவோம் (அல்லாஹ்)

எண்பத்தேழு ஆண்டு பறந்ததிக் கொடி – இன்று
இறைவன் அர்ஷில் இழைந்து பறக்கும் தளிர்க்கொடி
வஹ்தத்துல் உஜூதைக் காக்கவந்த திக்கொடி –எதிர்த்து
வந்த பகையை வென்ற கம்பீரக் கொடி
தீனின் கொடியேற்றுவோம்– ஞான
ஒளி யேற்றுவோம்– தானே
தனக்குள்ளே பார்க்கின்ற விழி கூட்டுவோம் (அல்லாஹ்)

கவீபா .ஆலிம் புலவர்

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முதலாம் ஆண்டு கந்தூரி கொடியேற்ற நிகழ்வில் பாடப்பட்டது.

இசை: ஒன்றே குலமென்று பாடுவோம்

# படைத்தல் என்பதன் பொருள் என்ன ?

## வஹ்த்துல் வுஜூத் விளக்கம்

ரஹ்மத் ராஜகுமாரன்

அல்லாஹ் படைத்தான் என்றால் அதிகமனோரின் அபிப்பிராயப்படி அல்லாஹ் என்று ஒருவன் எங்கோ இருந்து கொண்டு ஒவ்வொறு சிருஷ்டியையும் (தச்சன் மேசையைப் படைப்பதுபோல்) படைக்கின்றான் என்று கருதுகின்றனர். இது அக்கீதாவுக்கு மாபெரும் பிழையாகும்.

காரணம் : நான் அல்லாஹ்வின் ஒளியாக வந்தவன் என்று சொன்னவர்கள் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களாயிருக்க, நபிகளாரின் ஒளி இறைவனின் ஒளிக்கு எங்ஙனம் வேறாக இருக்க முடியும்?

இறைவனின் ஒளியைப் பிரிக்கவோ அல்லது பங்கு வைக்கவோ முடியாது என்பது பொதுவிதி. உண்மை இவ்வாறிருக்க, இறைவனின் ஒளியில் ஒரு பகுதிதான் றசூலுல்லாஹ்வின் ஒளியாக வந்ததென்று சொல்வது மடமையிலும் மடமையாகும்.

எனவே, படைத்தான் என்றால் அவனே வெளியானான் என்றுதான் நம்பவேண்டும். முஹம்மது நபியுடைய ஒளியாகவும் இவ்வுலகமாகவும் இவ்வுலகத்தின் எல்லாப் பொருட்களாகவும் அவனே வெளியானான் என்பதுதான் கலிமா கூறும் உண்மையான தௌஹீத் விளக்கமாகும்.

அல்லாஹ் என்பவன் தான் சிருஷ்டிகளைப் படைப்பதற்கு முன் எவ்வாறிருந்தானோ அதே நிலையில் எவ்வித குறைபாடுகளும் ஏற்படாமலும் அவன் இருந்தவாறேயிருக்க, முஹம்மதாயும், சர்வ பிரபஞ்சமாயும், வெளியானவன் அவனேதான். இதுவே தவ்ஹீத் என்பதன் அசைக்க முடியாத முடிவாகும்.

ஒரு பொருள் இன்னோரு பொருளாக வருவதற்கு 3 முறைகளுண்டு.

1. ஒரு பொருள் அழிந்து இன்னொரு பொருள் உண்டாதல்

2. பொருள் அழியாமல் மாற்றமடைந்து, விகாரப்பட்டு வேறொரு பொருளாகத் தோற்றமளித்தல்.

3. ஒரு பொருள் அழியாமலும், விகாரப்படாமலும் அது எவ்வாறிருந்ததோ அவ்வாறே இருக்க, வேறொரு பொருளாகத் தோற்றல்.

இம் மூன்று முறைகளிலும் மூன்றாவது முறையே அல்லாஹ்வைப் பொறுத்து உதாரணமாக எடுத்துக் கொள்ளலாமேயன்றி, ஏனைய இரு முறைகளையும் எடுக்க முடியாது.

காரணம், முதலாவது விதியின் படி மாம்பழத்தின் கொட்டையை பூமியில் நாட்டியபோது கொட்டையழிந்து மாமரம் வெளிவருவது போல்,

அல்லாஹ்வின் தன்ஸீஹ்– அரூப நிலை அழிந்துதான், தஷ்பீஹ்–ரூப நிலை ஏற்படுகிறது என்று கொள்ள முடியாது. அழிவை ஏற்றுக் கொள்ளக்கூடியது பூரணத் தன்மையுடையதாயிருக்க முடியாது என்பது பொது விதி. ஆகவே, இக்கொள்கையும் தவ்ஹீதுக்கு நேர் மாற்றமான கொள்கையாகும்.

இரண்டாவது விதியின்படி பொருள் ஒன்றுதான், ஆனால் அது அழியாமல் விகாரப்பட்டு காட்சியளிக்கின்றது. உதாரணத்திற்கு சட்டியை எடுத்துக் கொள்ளலாம். சட்டி என்பது மண்ணுடைய வடிவம்தான். மண் தான் சட்டியாக வந்தது. மண் அழிந்து சட்டியாக வரவில்லையாயினும், மண் விகாரப்பட்டு மாற்றமடைந்து சட்டி என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது.

இதே போன்று அல்லாஹ்வுடைய தாத் , வுஜூத் அழியாமல் விகாரமைந்து தான் சிருஷ்டியாக வெளியானதென்பதும் தௌஹீதுக்குப் பிழையானதும், முரணானதுமாகும்.

இப்படியும் அல்லாஹ் தன்ஸீஹுடைய நிலை விகாரப்பட்டு தஷ்பீஹ் என்ற நிலையில் வெளியாகவில்லை என்பது கொள்கை சம்பந்தமான அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும்.

மூன்றாவது விதியின்படி ஒரு பொருள் அழியாமலும், விகாரப்படாமலும், அது எவ்வாறு இருந்ததோ அவ்வாறேயிருக்க வேறொரு பொருளாகத் தோற்றமளித்தல் என்பதற்கு கல்பை (மனம்) உதாரணமாகக் கொள்ளலாம்.

கல்ப் என்பதை இதயம் என்று கருதலாகாது. இதயம் என்பது மனிதர்களுக்கு இருப்பதைப் போன்று மிருகங்களுக்குமுண்டு. அது மாங்காய் வடிவமானது. ஆனால் மனம் என்பது மனிதனுக்கு மாத்திரம் சொந்தமாக வழங்கப்பட்டது. ஆழ நீள அகலத்தை விட்டும் அப்பாற்பட்டது.

மாங்காய் வடிவான இதயம் கட்டுப்பாடுடையுடையது. கல்பு (மனம்) கட்டுப்பாடற்றதுடன் மனிதனுக்கு மாத்திரம் விஷேடமாய் வழங்கப்பட்டது. இம்மனதை மூன்றாம் விதிக்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

நாம் நித்திரை செய்யும்போது எத்தனையோ காட்சிகளை காண்கின்றோமென் றால் அது மனதின் தோற்றமேதான். கனவு காணும்போது செயல்கள் ஒவ்வொன்றும் வேறாகத் தெரிந்தாலும், ஒன்றுக்கொன்று நேர் மாற்றமாகத் தென்பட்டாலும் (உதாரணம்– நாய் கடிக்கிறது, கை வெட்டப்படுகிறது) அது மனதுக்கு வேறானதென்று கூற முடியுமா? எந்த வகையிலும் கூற முடியாது.

கனவுக் காட்சிகள் மனதின் தோற்றமேதான் என்பதை பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளும் உண்மை விளக்கமாகும். இதற்கு மாறாகக் கொள்வது பகுத்தறிவற்ற மிருக ஜாதியுடைய நிலையாகும்.

மனம் (கல்பு) என்பது இருந்தவாறேயிருக்க, அது அழியாமலும் மாறுபடாமலும் விகாரப்படாமலும் இருந்து கொண்டு, எவ்வாறு பல தோற்றங்களைப் பெறுகின்றதோ அதே போன்று அல்லாஹ்வும், தனது (தாத், வுஜூத்) பரிசுத்த நிலை அழியாமலும், விகாரப் பட்டு மாறுபடாமலும் முஹம்மத் நபீயாகவும் ஏனைய சிருஷ்டிகளாகவும் வெளியாகியிருக்கின்றான் என்பது தவ்ஹீத் கூறும் உண்மை ஞானமாகும்.

இக் கருத்தைத்தான் முஹம்மது இப்னு பழ்லுழ்ழாஹ் அவர்கள் தங்களது துஹ்பத்துல் முர்ஸலா என்ற கிரந்தத்தில்

அன்ன தாலிகல் வுஜூத லைஸ லஹூ ஷக்லுன், வலா ஹத்துன், வலா ஹஸ்றுன், வமஅ ஹாதா ழஹற வதஜல்லா பிஷ்ஷக்லி, வல்ஹத்தி, வலம் யதகய்யர் அம்மா கான மின் அதமிஷ் ஷக்லி, வமின் அதமில் ஹத்தி, பல் ஹுவல் ஆன கமாகான அலைஹி என்று கூறுகிறார்கள்.

இதன் பொருள் என்னவெனில், அந்த தாத், வுஜூதாகிறது, அதாவது அல்லாஹ் என்ற வுஜூதுக்கு உருவம் இல்லை, எல்லையில்லை, கட்டுபாடில்லை. ஆயினும் அவனவ்வாறிருப்பதுடன் உருவத்திலும், எல்லையிலும் வெளியாகிருக்கின்றான்.

இவ்வாறவன் வெளியானாலும் கூட, அவன் முன்பிருந்த நிலையிலிருந்து அழியவோ, மாறுபடவோ, விகாரப்படவோ இல்லை. அவன் மாறுபடப் போவதுமில்லை. அவன் முன்பு எவ்வாறிருந்தானோ அவ்வாறே இப்போதுமிருக்கின்றான்.

எனவே இதிலிருந்து நாம் விளங்குவது என்னவெனில், அல்லாஹ் என்பவன் அரூபி-ரூபி இரு தன்மைகளையுடையவனென்றும், இவ்விரு தன்மைகளைக் கொண்டும் நாம் ஈமான் கொள்வதோடு, அவனே இவ்வுலமாகவும், எல்லாப் பொருட்களாகவும், மனதிலூசலாடும் எண்ணமாகவும், ஒலியாகவும், ஒளியாகவும், எல்லாமாய் காட்சிளிக்கின்றான் என்பது தெள்ளதிற் பலனாக, உள்ளங்கை நெல்லிக் கனிபோன்று தெளிவாகின்றது.

---

## *சந்தேகம் வேண்டாம்!*

♦ அல்ஹாபிழ் அல் முஹத்திஸ் ஷம்சுத்தீன் இப்னு ஜஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது ஹிஸ்ன் உல் ஹஸீன் எனும் கிரந்தத்தில் கூறுகிறார்கள் :

அவுலியாக்களின் அடக்கஸ்தலங்கள் துஆக்கள் அங்கீகரிக்கப்படும் இடங்களில் ஒன்றாகும்

♦ அலி இப்னு மைமூன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லாஹ் கூறியதாக எங்களுக்கு அறிவித்தார்கள் :

எனக்கு ஏதும் தேவைகள் இருப்பின் இரண்டு ரக் அத்துக்கள் தொழுதுவிட்டு இமாம் அபூ ஹனிபா ரஹிமஹுல்லாஹ் அன்னவர்களின் அடக்கஸ்தலத்துக்குச் சென்று இறைவனிடம் பிரார்த்திப்பேன். எனது தேவைகள் நிறைவேற நீண்ட காலம் எடுத்ததில்லை

சந்தேகம் வேண்டாம்! நல்லோர்கள் காட்டிய வழியின் பிரகாரம் தூய எண்ணத்தோடு வலிமார்களின் அடக்கஸ்தலம் நோக்கி விரையுங்கள்! வாழ்வில் சுபீட்சம் உண்டாகும்! மகிழ்ச்சி பெருகும்! நிம்மதி ஏற்படும்!

♦ இமாம் அஹமத் இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுடைய மகனார் அப்துல்லாஹ் பின் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:

நான் எனது தந்தையிடத்தில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களது மிம்பரை பரக்கத்தை நாடியும் அல்லாஹ்விடத்தில் நெருக்கிவைக்கும் என்ற நம்பிக்கையிலும் தொட்டு முத்தமிடக்கூடிய மனிதர் பற்றியும் அவ்வாறே நபிகளாரின் புனித ரவ்லா ஷரீப் விடயத்தில் நடந்து கொள்பவரைப் பற்றியும் கேட்டேன். அதற்கு எனது தந்தை அவர்கள் அதில் எந்த தவறும் இல்லை என பதில் அளித்தார்கள்.

# கலீல் நாதரின் கந்தூரித் திருநாள்

*ஏ.என்.எம். முஹம்மது யூஸுப் ஹக்கிய்யுல் காதிரிய் –மதுக்கூர் (கேம்ப், கத்தார்)*

முதலாம் ஆண்டு கந்தூரி நாள் –குரு
முழுமையாய்க் காட்சி தரும் முத்தான நாள்.–மாய உருவை
மறைத்து விட்டு உயர் கருவாய் தம்மைக் காட்டிய நாள்
என்றும் நாயன் உருவில் நிலைத்திட்ட நித்திய நாள்!

கலீல் என்னும் நாமத்தில் காதிராகி ஹக்கில் ஹக்காய் வாழ்ந்து
கருணையால் எங்களின் உண்மையை உணர்த்தி தங்கள்
உயர் உண்மையில் மிளிர்ந்திட்ட அருள் நாள்–என்றும்
நித்திய ஜீவனாய் காட்டிடும் தவநாள்.

தங்களின் உண்மையினில் நாங்கள் ஃபனாவாகி
உயர் நன்மைகள் பெறும் உயர் நாள்.
நாங்கள் உண்டு இனி ஏன் கவலை என்ற உரை கேட்டு
ஹக்காய்த் தங்களின் திருவடி பணியும் பொன்னாள்.

கருடனைக் கண்ட கோழி தன் குஞ்சுகளை அரவணைப்பது போல்
தீமைகள் நெருங்காமல் எங்களைக் காக்கும் உயர்நாள்.
அவ்வலுத் தீனி மஃரிபத்துல்லாஹ் எனும் உண்மை
இனி உலகம் முழுவதும் ஓங்கி ஒலிக்கும் பொன்னாள்.

அனைத்தின் மூலமும் ஆதி இறை என்னும் வஹ்தத்துல் வுஜுது
உள்ளமையினை உலகம் கேட்டு உயர் வடையும் நாள்.
ஜோதி நபி நாதரின் உள்ரங்க வெளிரங்க வாரிசாய்
உயிர் நபியின் உயர் தத்துவம் உலகறியும் நன்னாள்.

சுவர்க்க நரகம் எமக்கு வேண்டாம், எம் இறையே
எம் வாழ்வாகும் என்ற உயர் போதனை ஒலிக்கும் நாள்
கொடிகளில் உயர்ந்ததுவாம் பிரபஞ்சம் காக்கும் லிவாவுல் ஹம்து
என்னும் நபி கொடி பட்டொளி வீசி பறக்கும் திருநாள்.

இறையின் கருணையும் ரசூலின் வடிவமும் உலகிற்கு வந்து
உலக மக்களுக்கு தவ்ஹீது நிறை அறிவைத் தரும் நாள்
ரசூலின் வடிவே அவர்கள் திருக்குடும்பம் அதன் வழியே
உலகம் வாழும் உயர் அறிவைக் காட்டித்தரும் அருள் நாள்.

ஹக்கின் கருவாம் கலிமாவின் திருப்பொருளை
அகிலத்தாரை அறியச் செய்த சம்பை அப்பா திருப்பேரரின் திருநாள்.
வள்ளல் குரு யாசீன் நாதர் வழிவந்த உயர் மகனார்
காலத்தின் உத்தமர் கருணை கலீல் நாதரின் அருள் நாள்.

ஆன்மீகப் புரட்சி மூலம் அறிவுப் புரட்சி செய்த
அண்ணல் நபி அழகுப்பேரர் அவுன் நாதரின் அருள் சுரக்கும் திருநாள்.
கருணை மிகு கலீல் நாதரின் கவின் மிகு சொற்களில் தம்மையழித்து
தன்னை உணரும் பாக்கியம் பெற்ற தவசீடர்களுக்கோர் தனிச்சிறப்பு நாள்.

உருவம் கலைத்திடும் முன் தங்களின் திருவடிவாய்
சங்கைகுரு யாஸீன் அலி நாயகத்தைத் தந்து எமைக் காக்கும் உயர் நாள்.
இவ்வுண்மை உறுதிப்படுத்த உயர் கனவுகளை உலகம் தந்து– இனி தங்களை
எங்கள் உயிர்க்குரு யாஸீன் அலி நாயகமாய்க் காணும் பொன்னாள்.

சங்கைக்குரிய நமது குருபிரானாகிய யா கலீல் அவ்ன் நாயகம் அவர்களின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

## செய்யிதினா யாஸீன் அலி நாயகமே!

காலத்தின் அதிபதியாம்
கலை ஞானத்தின் முழுமதியாம்
காவியத்தின் தலைமகனாம்
கலீல் நாதர் அருட்கொடை. (காலத்தின்)

அருள் நபி வழியில் பிறந்தீர்
சற்குரு நெறியில் வளர்ந்தீர்
வானூர்தி கலையை பயின்றீர்
வள்ளலே யாஸீன் அலி நாதரே (காலத்தின்)

பூப்போல் சிரிக்கும் மென்மை
கனிதரும் சொல்லோ இனிமை
அருள் வரம் தருவதில் மகிமை
அவர் ஹக்கில் ஹக்கான உண்மை (காலத்தின்)

**மெட்டு : காலங்களில் அவள் வசந்தம்**

பாடல் : முஹம்மத் சித்திக் பாஷா. ஹ.கா.
சென்னை.

# மவ்லிது ஸைய்யிது யாஸீன் மவ்லானா
# ஓர் ஆய்வு:–

## சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் நினைவுக்களஞ்சியத்துக்காக எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை

பிரபஞ்சப் படைப்பிற்கு முன்பே புகழுருவாய் பவனி வந்தப் பெருமானாரின் பேரொளி பகலவனாய் பூதவுடல் பெற்று புவி தன்னில் பூத்தது.

பரிசுத்தப் பூமான் நபியின் பிறப்பால் பேரண்டமே பவித்ரமானது.

அந்த ஆருயிர் அண்ணல் நபியின் அருட்சுடர்களை அவனி முழுதும் அள்ளிச் சென்றவர்கள் அவ்லியாக்கள் எனும் இறைநேசர்களாவர். அந்த அவ்லியாக்களிலேயே அதீத சிறப்புப் பெற்றவர்கள் பெருமானாரின் பரிசுத்தப் பரம்பரையில் பூத்த பூக்களான அஹ்லு பைத்துக்களாக உள்ள வலிமார் களாவார்கள். உலகின் நான்கு திசைகளிலும் வீற்றிருந்து ஆன்மீக அரசாட்சி புரியும் கௌஸுமார்களும் குத்புமார்களும் அவ்தாதுகளும் அப்தால்களும் அணிவகுத்துள்ள பட்டியலில் பெரும்பாலானவர்கள் அஹ்லு பைத்துக்களாவார்கள்.

ஆதியின் பேரொளியாய் புவி வந்தப் பூமான் நபியின் இந்தப் புனிதப் பரம்பரை யுகமுடிவு நாள் வரை நீடித்து நிலை நிற்கும்.

வையகத்திற்கு வருகை தந்த வலிமார்களில் அநேகர் அந்த அருள் வாரிசுகளிலிருந்தே அணிவகுத்தனர்.

அகிலமெல்லாம் அருளைச் சுமந்து சென்ற ஆன்மீகச் செல்வர்கள் அந்த வம்சத்தின் வளமான தொடர்பில் தங்களை ஈடுபடுத்தியே வந்துள்ளனர்.

பெருமானாரின் புண்ணியப் பரம்பரை, பார் முழுவதும் பவனி வந்தார்கள். நித்திய ஏகனின் சத்திய போதனைகளை பத்தியமாக போதித்தனர்.

அந்த வரிசையில் அண்ணல் நபிகளாரின் 33 வது தலைமுறையில் அருட்தவச் சீலராய், இலங்கை திக்குவல்லை எனும் ஊரில் தோன்றிய மஹான் குத்புஸ் ஜமான் அஸ்ஸய்யித் யாஸீன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு

அவர்களின் பெரும் புகழை யாத்துத் தந்த பெருமகனார், மஹானின் மகனாரான குத்புஸ் ஸமான் அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு அவர்களாவார்கள்.

தமது தந்தையான தகைமைசால் தவமாமுனியின் தவத்திரு வாழ்வை இலக்கிய நடையில் கோர்வை செய்த பெருமகனார் குத்புஸ் ஜமான் அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களது ஞானப் பேரொளிகளை சிதற விட்டுள்ளார்கள்.

“மவ்லிது ஸைய்யிது யாஸீன் மவ்லானா” எனும் இந்தக் காவியம் காலத்தால் அழிக்க முடியா வண்ணம் தனது இருப்பை ஞானவான்களின் சமுத்திரத்தில் தக்க வைத்து விட்டது.

செம்மொழியாம் அரபி மொழியில் பெருமகனார், குத்புஸ்ஸமான் அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் நமக்கு அளிக்கப்பட்ட இந்தக் காவியம் அரபி இலக்கியவாதிகளைக்கூட வியப்பின் விளிம்பிற்கே வரவழைக்கும் வண்ணம் உள்ளது.

அனந்தர ஆண்டவனின் அதீத அருளால் ஆனந்தப் பெருவெளியில் அனுதினமும் அள்ளிப் பருகும் அறிவமுதை அள்ளித் தீட்டியுள்ளார்கள் கலீல் அவ்ன் ஆண்டகை அவர்கள்.

செம்மொழியாம் தமிழ் மொழியின் இலக்கிய உலகில் மிகப்பெரும் பாண்டித்துவம் பெற்றிலங்கிய பெருந்தகை அரபியெனும் அளவிலா ஆழ்கடலிலும் அசைக்கவியலா அதீத அறிவைப் பெற்றுள்ளார்கள் என்பதற்கு இந்த “மவ்லிது ஸைய்யிது யாஸீன் மவ்லானா” எனும் இந்தக் காவியம் மிகப்பெரும் சான்றாகும்.

வார்த்தைகளின் வடிவங்கள் மாறி மாறி வருவதிலும், வேறுபட்ட ஓசைகளுடைய ஒரே வடிவ எழுத்துக்களை கொண்டு வருவதிலும், எதுகை மோனைகளை எடுத்தாள்வதிலும் எவரும் எட்ட முடியா உச்சத்தில் வீற்றுள்ளார்கள் ஆண்டகையவர்கள்.

அரபி மொழி இலக்கணங்களான சர்ப், நஹ்வில் துவங்கி அரபி மொழிக்கே உரிய இலக்கியச் சட்டங்களான இல்முல் பயான், இல்முல் மஆனி, இல்முல் பதீஃ வரை அனைத்திலும் குத்புஸ் ஸமான் கலீல் அவ்ன் ஆண்டகையிற்கு உச்சப்பட்சத் திறமை உள்ளது என்பதை இக்காவியத்தின் ஆரம்பம் முதல் அந்தம் வரை ஆங்காங்கே அடிக்கும் அறிவுக் கடலின் அலைகளின் அசுர ஓசைகளினால்அறிந்து கொள்ளலாம்.

அரபி இலக்கியங்களில் உரைநடை வடிவில் உள்ளதிற்கு 'ஹிகாயத்து' என்றும் செய்யுள் வடிவில் உள்ளதை 'ஷிஃர்' அல்லது 'பைத்து' என்றும் கூறுவர்.

முறையே இரண்டிலும் தனது தேனமுத தடாகத்தின் தீஞ்சுவைகளை தெவிட்டாத் தேனாக தெளித்துள்ளார்கள்.

ஆன்மீக ஆழ்கடல் ஆபத்தானது. அதில் உரிய குருநெறியின்றி நுழைய முற்பட்டோர் முறைதவறி இறைமுனிவிற்குள்ளாகினர்.

அதிலும் பார்க்குமிடமெங்கும் உயர்நீக்கமற நிறைகின்ற பரிபூரணாந்தமே என்ற பேரிறைவனின் பிரமிப்பான காட்சிகளைக் காணும் வஹ்தத்துல் உஜூத் தத்துவமோ மிகவும் ஆழமானதாகும்.

அந்த "வஹ்தத்துல் உஜூத்"எனும் ஆன்மீக இரகசியத்தை அனைவரும் விளங்கும் வண்ணம் அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் துவக்கத்தில் உள்ள ஹிக்காயத்திலேயே கொண்டு வந்த ஆண்டகையின் ஆன்மீக அதிகாரத்தை அனைவரும் அவ்வளவு எளிதில் அறிந்து விட முடியாது.

فَكُلُّهَا وُجُوْدٌ *

وَلَوْ كَانَ عَدَمًا لِلنَّظَرِ فِيْ عَيْنَيْهِ وَهُوَ مَوْجُوْدٌ

سُبْحَانَ عَمَّا سِوَاهُ

لِكَمَالِهِ لِاَجْلِ لَا سِوَاهُ اِلَّا هُوَ كَمَا ثَبَتَ فِيْ قُلُوْبِ

الْعَارِفِيْنَ * بِعُلُوْمِ وَحْدَةِ وُجُوْدِ التَّعْيِيْنِ * اِنَّ

الظَّاهِرَ وَالْبَاطِنَ كَانَا خَلْقًا وَمَخْلُوْقًا * وَفَرْدًا

مُطْلَقًا * وَلَيْسَ فِيْهِ شِرْكًا وَلَا فَرْقًا

போன்ற வரிகள் மூலம் பிரபஞ்சத்தின் அத்தனை காட்சிகளிலும் இறைவனின் திருதிவ்யக் காட்சிகளே தென்படுகின்றன, படைப்பில் படைத்தவனின் பேரின்பங்களைப் பார்க்கலாம் போன்ற பலம் வாய்ந்த பேரண்ட இரகசியங்களைப் புதைத்துள்ளார்கள் ஆண்டகையவர்கள்.

அண்ணலெம் பெருமானாரைப் புகழும் போது "அடுத்தடுத்து பெய்யும் பெருமழை" என்ற வாசகத்தை உபயோகித்துள்ளார்கள் ஆண்டகையவர்கள்.

ஆம். அல்லாஹ்வின் தூதரை அன்பு கொண்டு நேசிப்போர்கள் மீது பெருமானாரின் பூரண அருளானது மழையாக இறங்கிக் கொண்டே இருக்கும். அந்த அருள் மழை இவ்வுலகிலும் மண்ணறையிலும் மறுமையிலும் நீங்காமல் இறங்கும், இவற்றை தனது ஒற்றை இணைப்பு வார்த்தையால் விவரித்து விட்டார்கள் ஆண்டகையவர்கள்.

ஒவ்வொரு பைத்துக்களின் இறுதியிலும் தங்களது பெயரான "கலீல் அவ்ன்" எனும் பெயரைக்கூறி தனக்காக துஆ செய்திருப்பது மறுமை நாள் வரை வரும் முரீதீன்களும் முஹிப்பீன்களும் தம் பெயரைக் கூறி தமக்காக துஆ செய்ய வேண்டும் என்ற மிகப்பெரும் பணிவை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஆண்டகையின் துஆவிற்காக மனித ஜின் கூட்டத்தார் காத்திருக்க தனக்காக மற்றவர்கள் துஆ செய்யும் வண்ணம் வரிகளை வரைந்தது பேணுதலின் உச்சமாகும்.

أَنَا السَّيِّدُ خَلِيلُ عَوْنٍ وَاحْمِ مِنْ آفَاتٍ وَّنِقْمَتِهِ

என்ற வரியில் ஆபத்துக்களை விட்டும் பாதுகாத்து விடு என்பதோடு நிறுத்தாது "நிஃக்மத்தை" விட்டும் பாதுகாப்பளி என்று துஆ செய்துள்ளார்கள்.

" நிஃக்மத்" என்பது இறைவனால் வழங்கப்பட்ட அருள் மாற்றப்படுவது, பிடுங்கப்படுவது போன்ற விளக்கங்களை அளிக்கின்றன.

இதன் மூலம் தனது முரீதீன்கள் என்ன தான் வளமாக நலமாக வாழ்ந்தாலும் அவைகள் பிடுங்கப்பட்டுவிடுமோ எனும் அல்லாஹ்வின் அச்சத்திலேயே இருக்க வேண்டுமென்ற மறைமுகக் கட்டளையினை அளிக்கிறார்கள்.

وَاغْفِرْهُ وَارْحَمْ خَلِيلَ عَوْنٍ دَائِمَةً

எனும் வரி மூலம் எக்காலத்திலும் எந்நேரத்திலும் எச்சூழலிலும்

இறையருளையும் இறைமன்னிப்பையும் எதிர்ப்பார்த்தே இருக்க வேண்டுமென்ற ஏகாந்த நிலையினை எடுத்துரைக்கிறார்கள்.

وَاغْفِرْ خَلِيلَ وَعَوْنًا مِنْ ذُنُوبٍ لَهُ

எனும் வரி மூலம் பாவமற்ற பரிசுத்த பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தினந்தினம் பாவமன்னிப்பைக் கோரியதைப் போன்று அண்ணலாரின் பேரர் மஹான் கலீல் அவ்ன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு அல்லாஹ்விடம் பாவமன்னிப்பைக் கோருகிறார்கள்.

இதன் மூலம் குத்புஸ் ஸமானாக மெய்ஞ்ஞான சூரியனாக ஆன்மீகப் பெருவாழ்வை வாழ்ந்த ஆண்டகை, தமது முரீதுகளும் முஹிப்பீன்களும் மரணம் வரை பாவமன்னிப்பெனும் பெரும்பேற்றை பற்றிப் பிடிக்கக் கற்றுத்தருகிறார்கள்.

“ மவ்லிது ஸைய்யிது யாஸீன் மவ்லானா” எனும் இந்தக் காப்பியத்திற்குள் தங்களது தந்தையாரின் ஒட்டுமொத்த வாழ்வையும் சுருக்கி உள்ளார்கள்.

இனி நாம் பார்க்கவிருப்பது குத்புஸ் ஸமான் அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மவ்லானா அவர்கள் தனது தந்தையாரான அஸ்ஸைய்யிது யாஸீன் மவ்லானாவை பற்றி உரைநடை வடிவிலும் செய்யுள் வடிவிலும் கோர்வை செய்ததன் சுருக்கமாகும்.

**பிறப்பு:**

இலங்கையிலுள்ள மாத்தரை மாவட்டத்திற்கருகிலுள்ள திக்குவலை எனும் ஊரில் 29/12/1899 ஹிஜ்ரி 1317 ல் ஷஃபான் மாதத்தின் 27 நாட்கள் கழிந்த பின் ஞாயிற்றுக் கிழமை இஷா வேளையில் பிறக்கிறார்கள்.

**பெயர்:**

அஸ்ஸய்யிது யாஸீன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு

**பெற்றோர்கள்:**

அஸ்ஸய்யிது முஹம்மது ஜமாலிய்யா மவ்லானா, அஸ்ஸய்யிதா உம்மு ஹபீபா காதிரிய்யா (ரழியல்லாஹு அன்ஹுமா)

**தந்தையின் சிறப்பு:**

அஸ்ஸய்யிது முஹம்மது ஜமாலிய்யா மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு

அவர்கள் பஹ்தாதில் பிறந்தார்கள். மிகச்சிறந்த மார்க்க அறிஞராக குத்பாக வாழ்ந்தார்கள். நபிகள் கோமானின் 32 ம் தலைமுறையிலும் வலிகள் கோமானின் 19 ம் தலைமுறையிலும் தோன்றிய மாபெரும் தவசீலராவார்கள்.

பக்தாதிலிருந்து தீன் சேவைகளை ஆற்ற இலங்கை வந்து இந்தியாவிலும் இலங்கையிலும் எண்ணிக்கையில்லா தீன்பணியாற்றினார்கள். அதிகமான நபர்கள் இவர்களின் கரம் தொட்டு இஸ்லாத்தில் நுழைந்தார்கள். அதீத மக்கள் ஆன்மீகப் பெருவாழ்வில் நுழைய வாசலாக விளங்கினார்கள். இறுதியில் சம்பைப்பட்டிணத்தில் அடங்கி அரசாட்சி புரிகிறார்கள்.

**பரிசுத்தப் பரம்பரை:**

வலிகள் கோமானின் வாரிசாக அஸ்ஸய்யிது யாஸீன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு தோன்றினார்கள்.

இதை மவ்லிதின் வரிகளும் உறுதிபடுத்துகின்றன.

اِنِّیْ فَـقِـیْرٌ خَـادِمُ السَّجَّـادَةِ
لِلْغَـوْثِ جَـدِّیْ اَوْحَـدِ الْجِیْـلاَنِیْ
مُحْیِیِّ لِدِیْنِ اللهِ عَبْـدُ الْـقَـادِرِ
عَنْـهُ الرِّضَـا دَوْمًـا مَدَ الْاَزْمَانِ

மார்க்கத்தினை உயிர்ப்பித்த வலிகள் கோமானின் வம்சத்தில் உதித்த சேவகர் என்றும் யாசகர் என்றும் தன்னை வெளிகாட்டும் ஆண்டகை குத்புஸ் ஜமான் யாஸீன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பணிவு உச்சத்திலும் உச்சமாகும்.

ஹஸனி ஹுஸைனி என்ற இரு சங்கிலித் தொடரும் இணைந்தவராக ஆண்டகை இருந்தார்கள். குரைஷியாகவும் ஹாஷிமியாகவும் இருந்தார்கள்.

ஆண்டகையின் முன்னோர்களெல்லாம் குத்புகளாக கௌஸுகளாக வாழ்ந்து இன்றும் ஈராக்கில் ஆன்மீக அரசாட்சிப் புரிபவர்களாக உள்ளார்கள். பெரும் பெரும் கான்காஹ்களும் திக்ரு சபைகளும் இவர்களால் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டன. அப்பேற்பட்ட புனிதப் பாரம்பரியத்தில் பூத்த பூ இந்திய தேசத்திற்கும் இலங்கையிற்கும் மணம் வீச வந்தது.

**சுடர் விட்டு வளர்ந்தது:**

குத்புஸ் ஸமான் யாஸீன் மவ்லானா ஆண்டகையிற்கு ஐந்து வயதாகும் போது கடும்பசியினால் அழுதார்கள். அச்சமயம் அறிவாற்றல் கொண்ட தனது சிறிய தம்பி ஆண்டகையிற்கு அறிவுரை பகர்ந்தார். தாங்கள் ஏன் அழுகிறீர்? சிறிது நேரம் பொறுத்தால் நமது தாய் நமக்காக சுவையான உணவை சமைத்து கொண்டு வருவார்கள் என்று கூறினார். சிறிய சகோதரராக இருப்பினும் அவரின் சிறப்பைக் கருதி உடனே அமைதியாகி விட்டார்கள் ஆண்டகை.

இந்நிகழ்ச்சியினை பிற்காலத்தில் பகர்ந்து விட்டு தனது சீடர்களுக்கு துக்கமான ஓர் செய்தியினையும் எடுத்துரைத்தார்கள்; அதாவது தனது சிறிய சகோதரர் சிறுவயதிலேயே இவ்வுலகை நீத்தார் என்ற துயரத்தை கூறினார்கள்.

அறிவாய் அன்பாய் அருகிருந்த சகோதரர் அவனி நீத்த பின் பத்து வயதில் பெற்றெடுத்த பரிசுத்த தாய் அஸ்ஸய்யிதா உம்மு ஹபீபா காதிரிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் வையகத்தை விட்டு விடைபெற்றார்.

தந்தையோ தீன்பணியில் தென்னிந்தியாவில் இருக்க தனையனோ துணையேதுமின்றி இலங்கையில் தவித்தார். ஆதரவு தந்து அரவணைக்க உறவினர்கள் முன்வரவில்லை. பத்து வயதுப் பாலகனின் பசியினைப் போக்கவும் தாகம் தீர்க்க தண்ணீர் தரவும் ஒரு உறவும் கரம் கொடுக்கவில்லை. துயரக்கடலில் தத்தளித்த ஆண்டகை தந்தையினைத் தேடி தென்னிந்தியா வந்தார்கள்.

**கல்விப் பயணங்கள்:**

சமுத்திரத்தைக் காண கடல் ஒன்று வருவதைப் போன்று சம்பைப்பட்டினத்தில் சலிப்பில்லா தீன்பணியாற்றும் ஆன்மீகச் சூரியனான குத்புஸ்ஸமான் அஸ்ஸய்யிது முஹம்மது ஜமாலிய்யா மவ்லானாவைக் காண தனையன் வந்தார்.

தந்தையுடன் சில காலம் கழிந்த பின் துவக்கக் கல்வியினை கற்க மேலப்பாளையம் மஃக்னல் அஸ்ஃபியா மத்ரஸாவில் சேர்ந்தார்கள். பேரறிஞர் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ரழியல்லாஹு அன்ஹு அன்னவர்களின் மாபெரும் சீடரான மேலப்பாளையம் உஸ்தாத் முஹம்மது அலி ஆலிம் ரழியல்லாஹு அன்ஹு அன்னவர்களிடம் இலக்கணக் கல்வியினைக் கற்றார்கள். அல்லாமா அஷ்ஷைகு முஹம்மது யூசுப் ஆலிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஆன்மீகக் கல்வியினை கற்றார்கள். பிறகு சென்னை பழவேற்காட்டில் வாழ்ந்த மாபெரும் மஹான் முஹம்மது அலவிய்யுல் ஜமீலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இலக்கியக் கல்வியினையும் தத்துவக் கல்வியினையும் கற்றார்கள்.

பிறகு லாஹூர் இஸ்லாமிய்யா பல்கலைகழகத்திலும் தேவ்பந்த் மத்ரஸாவிலும் உயர்க் கல்வியினை முடித்து தனது பதினெட்டாம் வயதில் கல்விப் பயணத்தை நிறைவு செய்தார்கள். சிலக்காலம் அங்கேயே நான்கு மத்ஹபுகளின் பாடங்களையும் போதித்தார்கள்.

**சிறப்பியல்புகள்:**

அஸ்ஸய்யிது யாஸீன் மவ்லானா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்தியாவில் "லாஹூர் மவ்லானா" என்றும் அரபு நாடுகளில் "ஷைகுல் அரப்" என்றும் அழைக்கப்பட்டார்கள். ஷாஃபிஈ மத்ஹபை சார்ந்தவராகவும் காதிரிய்யா தரீக்கத்தை சார்ந்தவராகவும் இருந்தார்கள். ஆன்மீகவாதிகளுக்கு அடைக்கலமாகவும் இறைஞானப் புதையலாகவும் பேரின்ப வாழ்வின் புகுமிடமாகவும் இறையச்சவாளர்களுக்கு கிரீடமாகவும் அறிஞர்களுக்கு அரசராகவும் தவமாமுனிவராகவும் வாழ்ந்தார்கள்.

**சேவைகளுக்குச் சொந்தக்காரர்:**

உயர் மட்டம் துவங்கி தாழ்நிலையிலுள்ளோர் வரை அரசன் துவங்கி ஆண்டி வரை அனைவருக்கும் அவர்கள் அவர்களுக்கு தகுந்த அறிவுரைகளையும் அறவுரைகளையும் கொடுத்தார்கள். முஸ்லிம் சமூகத்திற்கும் மற்ற சமூகத்திற்கும் அனைத்து வித சேவைகளையும் புரிந்தார்கள். மஸ்ஜிதுகள் இல்லாத ஏராளமான ஊர்களுக்கு மஸ்ஜிதுகளைக் கட்டினார்கள்.

ஏழைகளுக்கு ஏந்தலாகவும் வறியவர்களுக்கு வள்ளலாகவும் வாழ்ந்தார்கள்.

கல்விச் சேவைகளிலோ கோலோச்சினார்கள். அனைத்துத் துறையிலும் அநேக நூற்களை கோர்த்துள்ளார்கள். அரபி, தமிழ், ஆங்கிலம், மலையாளம், உர்தூ, ஃபார்ஸி, ஹிந்தி மொழிகளில் முனைவராகத் திகழ்ந்தார்கள். உலகப்புகழ் பெற்ற ஸஹீஹுல் புகாரி கிதாபிற்கு நான்கு பாகங்களில் "அல்இக்துத்தராரி பீ ஷரஹி ஸஹீஹில் புகாரி" எனும் அரபி விளக்கவுரை எழுதியுள்ளார்கள் அதுகூடிய விரைவில் இன்ஷா அல்லாஹ் அச்சிற்கு வரும், ஆன்மீகப் பேராசான் அப்துல் கரீம் ஜீலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் "இன்சானுல் காமில்" கிதாபிற்கு "இஹ்சானுல் வாசிலி" என்ற அரபி தெளிவுரையினை எழுதியுள்ளார்கள், ஆன்மீகப் பெருங்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் முனைவர்களுக்காகவே ஒரு அரும்பெரும் கிதாபை எழுதியுள்ளார்கள்,
"யவானிவு அஸ்மாருன் நிஃமா" என்று பெயரிடப்பட்ட இக்கிதாபில் ஆன்மீக ஆழ்ரகசியங்களை அடக்கிய பைத்துக்களை இயற்றியுள்ளார்கள், ஆலிம்

பெருமக்களுக்காக ஆண்டகை எழுதிய அரபி – தமிழ் வார்த்தைகள் மொழிப் பெயர்ப்பு நூலான "காமூஸுல் அரபிய்யா வஅர்விய்யா" எனும் நூல் உலகப் பிரசித்திப் பெற்றதாகும், அறிஞர் பெருமக்களுக்காக எழுதப்பட்ட இந்நூல் பின்னாட்களில் தூயத்தமிழில் ஆண்டகை மொழியாக்கம் செய்த பிறகு இன்று அனைவர் கரங்களிலும் ஆனந்த நடனமாடுகிறது, இதயச்சுத்தத்திற்கான மருந்தாகவும் ஆன்மீக விருந்தாகவும் உள்ள "ராத்திபத்துல் ஹக்கியத்துல் காதிரிய்யா" என்ற நூலை திக்ருகளையும் அவ்ராதுகளையும் கொண்டு கோர்வை செய்து எழுதினார்கள், பூமான் நபியினால் போர்த்தப்பட்ட புனிதப் போர்வைக்குச் சொந்தக்காரரான மஹான் பூசுரி இமாமின் புனித "கஸீதத்துல் முளரிய்யா"வினை ஐந்தடி செய்யுளாக மாற்றி இயற்றியுள்ளார்கள்.

மஹானிடத்தில் மண்டியிட்டு ஓத அறிஞர்க் கூட்டம் அலை மோதும், மார்க்கச் சட்டங்களின் ஒட்டுமொத்த நுணுக்கங்களையும் கையடக்கத்தில் கொண்டிருந்த மாமேதையாகத் திகழ்ந்த மஹானைத் தேடி மார்க்கக் கல்விக்காக இந்தியாவை சுற்றியுள்ள நாட்டின் அறிஞர்கள் அலைமோதுவர்.

**திருமணம் எனும் சுன்னத்:**

நாயகமவர்கள் தஞ்சை மாவட்டம் திருமுல்லைவாசலை சார்ந்த காஜி ஷைகு ஃபரீதுத்தீன் பக்ரி அஸ்ஸாலிஹி அவர்களின் குலக்கொழுந்தான ஷரீபா பாத்திமா பீ அவர்களையும், ஸைய்யிது தாஸீன் மவ்லானா அல்காதிரி அவர்களின் மகளான ஷரீபா ஸைய்யிதா ஸஹ்ருவான் என்பவரையும் மணமுடித்தார்கள்.

**தரீக்கா எனும் ராஜபாட்டை:**

தரீக்கத்துல் ஹக்கிய்யா காதிரிய்யாவிற்கு ராஜகுருவாக இருந்தார்கள், ஆழமான ஆன்மீகத்தினை எளிதில் அன்பர்கள் உள்ளத்தில் உட்புகுத்தும் பேராற்றல் கொண்டவர்கள். ஆயிரக்கணக்கான முரீதீன்களை இந்தியாவிலும் இலங்கையிலும் கொண்டவர்கள், தந்தையாரிடமிருந்து கிலாபத்தையும் பொதுவான இஜாஸத்தையும் கிர்க்கா எனும் சூபிகளின் ஆடை அணிவிக்கப்பட்டு பெறுகிறார்கள். காதிரிய்யா தரீக்காவின் சித்தாந்த உரிமையினை தந்தையாரிட மிருந்தும் அஷ்ஷைகு அல்குத்பு அப்துல் காதிர் காஹிரி ரழியல்லாஹு அன்ஹு அன்னவர்களிடமும் பெற்றார்கள். நக்ஷ்பந்தியா தரீக்காவின் சித்தாந்த உரிமையினை அஷ்ஷைகு முஹம்மது அல்புகாரி நக்ஷ்பந்தி அவர்களிடமிருந்து பெற்றார்கள். ஷாதுலிய்யா தரீக்காவின் சித்தாந்த உரிமையினை அஷ்ஷைகு அஸ்ஸைய்யிது அஹ்மது அல்ஹுமைஸரி ரழியல்லாஹு அன்ஹு அன்னவர்களிடமும் பெற்றார்கள்.

மஹானின் தரீக்கத்துல் ஹக்கிய்யா காதிரிய்யா எனும் தரீக்காவில் இன்று உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான முரீதீன்கள் உள்ளனர். ஆன்மீக ஆழ்கடலில் இத்தரீக்கா கியாம நாள் வரை தொடரும் இன்ஷா அல்லாஹ்.

**ஆண்டகையின் அற்புதங்கள்:**

இறைநேசர்களின் இரத்தம் ஓடும் புனித உடல் பெற்றுள்ளதால் ஆண்டகையின் சிறுவயதிலிருந்தே கராமத்தெனும் அற்புதங்கள் அளவில்லாதுவெளிப்பட்டன.

வேட்டையாடப்பட்டு விடப்பட்ட காய்ந்த மீன்களை தங்கள் திருக்கரத்தால் தண்ணீரில் தூக்கி வீசும்போது உயிர்ப்பெற்று துள்ளிக் குதிக்கும். மற்றவர்கள் முன் இதைச் செய்ததற்காக ஆண்டகையின் தந்தை குத்புஸ்ஸமான் அஷ்ஷைகு ஜமாலிய்யா மௌலானா ஆண்டகையினை தண்ணீரில் தள்ளியபோது தண்ணீர் சற்றும் படாது ஆண்டகை மிதந்து வந்த கராமத்தைக் கண்டோர் வாயடைத்துப் போயினர்.

ஆண்டகையவர்கள் இலங்கையில் ஆன்மீக அரசாட்சி புரிந்த போது ஆண்டகையின் ஆணையிற்கு அடிபணியாது அவமதித்த இருவரின் இறுதிநிலை இழிவாக்கப்பட்டு இருவரின் உடல்கள் கூட ஊரில் நுழையாத வண்ணம் ஆகிவிட்டது. இலங்கையில் மஸ்ஜிதின் பொருளைத் திருடிய ஒருவரிடம் ஆண்டகையவர்கள் திரும்பி வைக்குமாறு கூற, அவரோ பன்முறை தான் திருடவேயில்லையென மறுத்தார், கடுங்கோபமுற்ற ஆண்டகை "இவன் ஒரு மோசடிக்காரன் இவன் நாக்கு தொங்கட்டும்" எனக் கூற தாடையிலிருந்து நாக்குத் தொங்கிய நிலையில் மிகவும் சிரமப்பட்டு இறந்தார். மறைந்த நிறைய மஹான்களின் மண்ணறையினை மக்களுக்கு அடையாளமிட்டு அறிவித்துள்ளார்கள். மழையினை பெய்ய வைப்பதும் நிறுத்துவதுமான அற்புதத்தை ஆண்டகையவர்கள் கொண்டிருந்தார்கள். இப்படிக் கூறிக் கொண்டே செல்லலாம், அவ்வளவு அற்புதங்கள் ஆண்டகையிற்கு உள்ளன.

**ஆன்மீக ஆதவனின் அஸ்தமம்:**

ஆண்டகையிற்கு 63 வயதாகிய போது தங்களை இறையழைப்பு நெருங்கி வருவதாக முரீதீன்களிடம் கூறினார்கள். திடுக்குற்ற முரீதீன்கள் தங்களின் தந்தையார் 140 வருடங்கள் வாழ்ந்தார்கள் பாட்டனார் 91 வருடங்கள் வாழ்ந்தார்கள், அவ்வாறிருக்க தாங்கள் ஏன் இவ்வாறு கூறுகிறீர்? என்றுரைத்தார்கள். இச்சமயம் ஆண்டகையவர்கள் என் துஆவால் நான் மூன்று வருடங்கள் மரணத்தை பிற்படுத்தியுள்ளேன் என்றார்கள். இச்சம்பவத்திற்குக் பிறகுண்டான மூன்று

வருடங்கள் அற்புதங்கள் வெளிப்படும் வாழ்வாக இருந்தது. மறைவுலக மாந்தர்களுடன் பல்வேறு உரையாடல்கள் புரியும் வண்ணமே மூன்று வருடங்கள் முடிந்தன. பிறகு பெருந்தகை இந்தியாவிற்கு வருகை புரிந்தார்கள். மீண்டும் தங்களின் மறைவை பற்றிய செய்தியினை முரீதீன்களுக்குக் கூற முரீதீன்களோ கவலைக் கடலில் தத்தளித்தனர். பின்பொரு நாள் வந்தது. ஆண்டகையவர்கள் இன்று மரணம் என்னைத் தீண்டுமென உரைக்க உள்ளம் உடைந்தனர் முரீதீன்கள். அணி அணியாக அவ்லியாக்கள் ஆண்டகையினை சந்திக்க வந்த வண்ணமே இருந்தனர், மதுரையினைச் சார்ந்த அல்குத்பு முஹம்மது அப்துல் காதிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்தார்கள். இறுதியாக ஆன்மீக உலகின் பேராளுமை கிழ்ரு நபி அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வந்தார்கள், ஆண்டகையினை அரவணைத்து அளவளாவிய பிறகு இறையழைப்பை இனிதே ஏற்றார்கள் ஆண்டகை. காடு மலை மேடென சுற்றித் திரிந்து இறையின்பக் காதலைப் பரப்பிய ஓர் பேராளுமை தஞ்சை திருமுல்லைவாசலில் 1966 மார்ச் 10 இல் தன் திருவுடலை மறைத்துக் கொண்டது.

**ரழியல்லாஹு அன்ஹு.**

வல்லோனாம் இறைவன் அல்குத்பு ஜமாலியா மவ்லானா, அல்குத்பு யாஸீன் மவ்லானா, அல்குத்பு கலீல் அவ்ன் மவ்லானா எனும் புனிதர்களான இந்த மூன்று மஹான்களின் அருட்பார்வையில் வாழும் பெரும்பாக்கியத்தை நமக்குத் தருவானாக! ஆமீன்.

***நபிநேசன், ஆலிம், ஹாபிழ், காரி, எம்.முஹம்மது ஃபாஜில் நாஃபிஈ பி.காம்***

***இமாம்– ஈத்கா மஸ்ஜித்,பேராசிரியர் & கண்காணிப்பாளர், தாருல் உலூம் கௌசியா அரபிக் கல்லூரி & யதீம் கானா, முகம்மது அலி குத்பா தைக்கால், தஞ்சாவூர்.***

## *நபி மொழிகள்*

**ரிஜ்க் குறையும்**

பாவங்களின் காரணமாக பரக்கத் (ரிஜ்க்) குறைந்து, இவ்வுலகில் வறுமை பீடிக்கிறது. இது உலகில் உண்டாகும் நட்டமாகும்

**நன்மை செய்யுங்கள்**

நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் நம்மைப் பார்க்கின்றான் என்று அஞ்சி நடந்து வாருங்கள். தவறுதலாக தீமை நிகழ்ந்துவிட்டால் உடனடியாக, நன்மை செய்யுங்கள். நன்மை தீயதை அழிக்கும் சக்தி படைத்தது. மக்களுடன் அன்பாகவும். நற்குணத்துடனும் பழகி வாருங்கள். –திர்மதி–

# புகழ்க் கொடி!

கலீபா **A.N.M.** அட்வகேட் லியாக்கத் அலி **B.Sc.,BL.**

பரவெளியாய் நிலைத்திட்ட பயஹம்பர் நபிபேரர்
பாரினிலே ஞானப் புரட்சி செய்த கலீல் அவ்ன் நாதர்
மண்ணுலகில் வாழ்ந்திட்ட காலத்திலும்
மானீக்கி அருவான எங்கள் குருநாதர்
வாழுகின்ற கோட்டையிலே கொடி பறக்குது
பெருமை மிகு பெருமானின் கொடி பறக்குது
பெருமானார் கோட்டையிலே புகழ்க் கொடியும் பறக்குது!

வாழுகின்ற முஹிய்யுத்தீனாம் வள்ளல் நபி திருபேரர்
கலீல் அவ்ன் நாதர் காட்டிச் சென்ற
காலத்தின் அதிபதியாம் யாஸீன் அலி நாதர்
சமைத்திட்ட ஜெயக் கொடி பறக்குது
புற ஒளியாய் வெளியான பரவெளியாய்
நிலைத்துநிற்கும் சுய வெளியாம்
ஞானச் சுடரொளியாம் மோன குருவாம்
தோழமையும் இரட்சண்யமும் இணைந்திட்ட தூய ஒளியாம்
கலீல் அவ்ன் நாதர் கோட்டையிலே கொடி பறக்குது!

காணாக்கரை ஞானத்தைக் காட்டி சென்ற
நிறைஞான முழுமதியாம் கலீல் அவ்ன் நாதர்
அரண்மனையில் கொடி பறக்குது!
ஞானக் கொடி பறக்குது
வேதங்கள் முழங்கும் பேதங்கள் நீங்கும்
வீண்வாதங்கள் செய்யும் வீணர்களை வீழ்த்தும் கொடி பறக்குது!
யாஸீன் அலிநாயகம் சமைத்த கொடி பறக்குது
காலத்தின் நாதர் யாஸீன் அலி சமைத்திட்ட கொடி பறக்குது!

**சன்மார்க் கத்தின் பால் நடைபோடுகின்ற பெண்ணே ஒரு மனிதனுடைய தலை சிறந்த கருவூலமாகும்.**

– நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்  அவர்கள் –

# 4. நாங்கள் கண்ட முஹிய்யுத்தீனிய சன்னிதானம்

**A. முஹம்மது ஸகரிய்யா (கப்பல் பொறியாளர்). ஹக்கிய்யுல் காதிரி .திருச்சி.**



குத்புல் மத்ஹரீ மஹானந்தபாபா (ரலி) அவர்கள் தங்களுடைய நெருங்கிய பக்தர்கள், ஞானவேட்கை உள்ளவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை முஷாஹதா நடத்துவார்கள். அதுவே பைஅத் எனும் ஞான தீட்சையாகும்.

ஓரளவுக்கு வயது உள்ளவர்களாகவும் குறைந்த பட்சம் திருமணமானவர் களாகவும் ஓரளவுக்கு பக்தியும் மனப்பக்குமாகவும் இருப்பவர்களை மட்டுமே அதில் சேர்த்துக் கொள்ளுவார்கள். அதில் விதிவிலக்காக 20 வயதிற்கும் குறைவான திருமணமாகாத அப்துல் கரீம் ஜமாலி அவர்களை குத்புல் மத்ஹரி நாயகம் சேர்த்திருந்தார்கள்.

ஏனென்றால் குத்புல் மத்ஹரி நாயகம் அவர்கள் தபால் மூலம் அனுப்பும் உத்தரவுகளை உடனே நிறைவேற்றுபவர்களாகவும் கூப்பிட்ட உடனே சொந்த வேலைகளை விட்டு விட்டு உடனே சென்று ஹாளிர் ஆகுபவராகவும் இருந்தார்கள். மேலும் அவர்களின் தந்தை காதிமுல் அவ்லியா போல தர்பாருக்காக செலவு செய்பவராகவும் இருந்தார்கள்.


Oliyullah

19 Kolukatte Road
Jallalkulam P.O.
Madurai
5-9-58.

மின்ஹா அப்துல்கரீமுக்கு துஆ உண்டாகட்டும்.

ஒரு முக்கிய விஷயம் உம்மிடம் பேச வேண்டியிருப்பதால் 2, 1 நாளில் தாம் இவ்விடம் வந்து போகவும்.

உங்கள் எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

K. K. K. K.

கோவிந்தர் அப்துர்ரஹீமை நான் சொன்னதாகச் சொல்லாமல். தாமே சொல்லி சீக்கிரம் இவ்விடம் வரும்படி செய்யவும்.

குத்துபுல் மதுஹரி அவர்களின் 05.09.1958 பட்டோலை

குத்புல் மத்ஹரி அவர்கள் நாளையே வரும்படியும் இரண்டொரு நாளில் வரும்படியும் உத்தரவிட்ட சில பட்டோலைகள்.



Mahananda Baba Oliyullah Swami,

19, Gokhale Road,
TALLAKULAM P. O.,

MADURA.
12th Jan. 1950.

பிள்ளை அப்துல் கரீமுக்கு ஆசீர்வாதம்.
ஒரு முக்கியமான விஷயம் உன்னிடம் பேச வேண்டியிருக்கிறது. ஆனதால் இது கண்டதும் பார்த்தவுடன் காரைக்கே புறப்பட்டு இவ்விடம் வரவும். உடனே திரும்பி போய்விடலாம்.
உங்கள் எல்லோருக்கும் ஆசீர்வாதம்.
மேலே வாணிபம் என்ன விசேஷமாயிருக்கிறது? அதை விசாரித்து வரவும். வரும்போது வெற்றிலை வாங்கி வரவும். ஆசீர்வாதம். M.U.Swamy.

குத்துபுல் மதுஹரி அவர்களின் 12.01.1950 பட்டோலை



Mahananda Baba Oliyullah Swami,

19, Gokhale Road,
TALLAKULAM P. O.,

MADURA.
13th Jan. 1951.

எமது பக்தசொரூபர் பிள்ளை அப்துல்கரீமுக்கு ஆசீர்வாதம். [illegible] நீ அனுப்பிய ரூ 100/- ஒருவகையாக நினைக்கவேண்டியதாயிற்று. இந்த நன்றிக்கு உன் வியாபாரத்தில் விருத்தியும் சௌகரியத்தையும் தந்தருள துஆ செய்தேன். [illegible] கேட்டுப்பெற்றான். என்செய்கிறது என்று தெரிந்து [illegible] சொல்லி திருப்பிவிட்டேன். [illegible] எமது பக்தர்களில் நீ ஒருவன் விசேஷித்திருக்கிறாய். இதை எப்பொழுதும் மறக்கமுடியாது.
உங்கள் எல்லோருக்கும் எமது துஆ உண்டாகட்டும்.
M.A.M.M.

குத்துபுல் மதுஹரியவர்களின் 13.01.197 பட்டோலை

குறிப்பு:- 1951 இல் (10 கிராம்) தங்கத்தின் விலை ரூ 98.00 ரூபாய்.

இருபது வயது கூட நிரம்பப் பெறாத அப்துல் கரீம் ஜமாலி அவர்களுக்கும், குத்புல் மத்ஹரி அவர்கள் தரிசன விழா அழைப்பிதழ் அனுப்புவது வழக்கம். இந்த சிவ தரிசனம்தான் குத்புல் மத்ஹரி நாயகமவர்களின் பைஅத்து என்பதும் இந்த பைஅத்து மூலம் கலீபா அப்துல் கரீம் அவர்கள் குத்புல் மத்ஹரி நாயகமவர்களின் முரீது என்பதும் கலீபாவுக்குத் தெரியாது. காரணம், குத்புல் மத்ஹரி நாயகமவர்கள் மற்றெல்லா குத்புமார்களைப் போலல்லாது ஸ்பரிச தீட்ஷைக்குப் பதிலா நயன தீட்ஷை மூலம் பைஅத் கொடுப்பவர்களாகவிருந்தார்கள். இந்த விஷயம் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு குத்புல் அக்தாப் யாஸீன் நாயகம் அவர்களின் மூலமாகத்தான் கலீபாவுக்கே தெரியம். ஸுப்ஹானல்லாஹ்.


The Darsan of
SRI MAHANANDA BABA
OLIYULLAH SWAMY.

Tallakulam Post, MADURA.

The next Darsan of Sri Mahananda Baba Oliyullah Swamy comes off on the ... of May 1947 at 19, Gokhale Road, Madura.

Please be present on the sacred occasion and receive in person His Grace and Blessings.

The date of your arrival may be intimated to the undersigned sufficiently in advance.

Yours fraternally,

தரிசனத் திருநாள்

தரிசன திருநாள் அழைப்பிதழ்

யாஸீன் நாயகமவர்களும் சிலரைத் தவிர மற்றவர்களுக்கு தங்களின் குத்பியத்தை மறைத்திருந்தார்கள். குத்புமார்கள் இவ்வாறு குத்பிய்யத்தை மறைத்து காலம் வரும்போது வெளிப்படுத்துவார்கள் என்பதை வாப்பா நாயகம் பட்டோலையில் அறிவித்துள்ளார்கள்.

29.06.1966 Ãâ¼ Vç é I _ "தன்னை மறைத்து குத்பாக வாழ்ந்த குத்புமார்களும் இருப்பர். பகிரங்கமாக தன்னை குத்பு எனக் கூறும் குத்புமாரும் இருப்பர். தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை வெளியிட வேண்டிய காலம் வந்தபோது வெளியிடுவர்" என்று எழுதியுள்ளார்கள்.

பலரும் குத்புல் அக்தாப் யாஸீன் நாயகத்தின் குத்பிய்யத்தை அறிந்திருக்க வில்லை என்பதை சங்கைகுரிய வாப்பா நாயகமவர்கள் 08.08.1967 பட்டோலையில் அறிவித்துள்ளார்கள்.

**குறிப்பு:** மறைஞானப்பேழை2024 டிசம்பர் மாத இதழில் **பையாளுல் உலூம் அரபி மத்ரஸா** என்பதை **மன்பவுல் கைராத் அரபி மத்ரஸா** என்று திருத்திக்கொளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.



குத்புல் மத்ஹரியுடன் கலீபா அப்துல் கரீம் ஜமாலி

# பல்லக்கு தம்பி வலீ(ரஹ்)

(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.ஸி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)

ஒருமுறை நம் வலீயுல்லாஹ் அவர்கள் சுந்திரபாண்டியபட்டினம் என்ற ஊருக்குச் சென்றிருந்தார்கள். அவ்வூரில் ஒரு அடக்க விடத்தை பலபேர் கூடி கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்ணுற்றவர்கள் "இதென்ன கொடுமை! இங்கு யாரும் அடக்கப்படவில்லையே வெறும் கபுரை ஏன் இப்படிக் கொண்டாடி வருகின்றீர்கள்?" என்று அங்குள்ளவர்களைக் கடிந்து கொண்டார்கள்

ஒருமுறை வலீயுல்லாஹ் அர்கள் கோயமுத்தூருக்குச் சென்றிருந்தார்கள். அங்குள்ள ஒரு பள்ளியில் உள்ள கிணற்றில் தண்ணீர் ஊறாமல் காய்ந்து போய்க் கிடந்தது. அவ்வூர் மக்கள் இந்தப் பள்ளிக்குத் தொழ வருவோருக்கு போதிய தண்ணீரின்றி மிகவும் சிரமப் படுகிறார்கள். இந்த வற்றிப்போன கிணறு மறுபடியும் ஊற்றெடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்களும் அதற்காக துஆ செய்தார்கள். என்ன ஆச்சரியம்! வற்றிப் போன கிணறில் மெல்ல மெல்ல ஊற்றுக்கண் திறந்து தண்ணீர் வழியத் தொடங்கியது. ஊர் மக்களுக்கோ மட்டிலடங்காத மகிழ்ச்சி!

வலீயுல்லாஹ அவர்கள், அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே பயப்படக் கூடியவர்கள். எவ்வளவு பெரிய செல்வச் சீமானாக இருந்தாலும் அதைப்பற்றி பொருட்படுத்தவே மாட்டார்கள். ஒரு சமயம் ஒரு ஊருக்குப் போயிருந்த போது அவ்வூர் பெரிய பணக்காரார் ஒருவர் வலீயுல்லாஹ் அவர்களை பலவாறு ஏசிப் பேசி வந்தார். இதை தம் உள்ளுணர்வால் உணர்ந்து கொண்ட அவர்கள் அவர் ஒரு கூட்டத்தில் நிற்பதைக் கண்டு விட்டார்கள். உடனே அவரைப் பெயர் சொல்லி அழைத்தார்கள். அவர் நடு நடுங்கி வந்தார். "எனக்கு எல்லாம் தெரியும் உன் வாயைப் பேணிக் கொள்!" என்று எச்சரிக்கை செய்து அனுப்பி விட்டார்கள்.

வலீயுல்லாஹ் அவர்கள், தொண்டி வந்திருந்த போது, "இவர் உண்மையான வலீதானா? என்று சோதித்து பார்த்து விட வேண்டும்" என்ற எண்ணத்தோடு வெளியூரிலிருந்து ஒருவர் அங்கு வந்திருந்தார். வலீயுல்லாஹ் அவர்களை சில சமயங்களில் தம்மையும் மீறி பற்பல விதமாய் திட்டித் தீர்ப்பது வழக்கம் . அதைக் கண்ட அந்த வெளியூர் நபர், "இம்... இவர் ஒரு வலீயாக இருக்க முடியாது" என்று எண்ணிக் கொண்டார். இதை உள்ளுணர்வால் அறிந்து கொண்ட அவர்கள்

அந்த நபரைப் பார்த்து, “நான் வலீயோ ஜாஹிலோ உனக்கு என்ன? உன் வேலையைப் பார்த்துக் கொண்டுபோ!” என்று கோபத்துடன் கூறினார்கள்

அந்த நபர் பதறிப் போனார். உடனே அவர் ஓடிவந்து அவர்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க அவர்களும் அவரை மன்னித்து அனுப்பி விட்டார்கள்.

ஒரு நபர் வலீயுல்லாஹ் அவர்கள் தம் ஊருக்கு வந்த செய்தியை இவ்வாறு விவரிக்கின்றார்.

எங்கள் ஊருக்கு பல்லக்குதம்பி வலீயுல்லாஹ் வருகை தந்திருந்த போது மக்கள் அனைவரும் போட்டிப் போட்டுக் கொண்டு அவர்களை தத்தம் இல்லங்களுக்கு அழைத்து உணவு கொடுத்து உபசரித்து அவர்களிடம் நல்லாசி பெற்றுக் கொண்டார்கள். அவர்களை காணவருபவர்கள் கற்கண்டு எலுமிச்சை பழம் கொண்டு வருவது வழக்கமாக இருந்தது.

அவ்வூர் பெரிய மனிதர் ஒருவர் வலியுல்லாஹ் அவர்களைக் காண வரவே இல்லை. பல நாட்கள் ஆகிவிட்டது. ஒருநாள் திடீரென நல்ல புத்தாடை அணிந்து கொண்டு பகட்டாக வலீயுல்லாஹ் அவர்கள் முன்புவந்து அமர்ந்தார். வலியுல்லாஹ் அவர்கள், ஏன் அவர் இத்தனை நாள் தம்மை வந்து பார்க்க வில்லை என்பதை யெல்லாம் தம் உள்ளுணர்வால் அறிந்து கொண்டார்கள். வலீயுல்லாஹ் அவர்கள் அவரைச் சுட்டிக்காட்டி அழைத்து, “நீர் யார் இந்த ஊர் பள்ளிவாசல் கதீபா?” என்று கேட்டார்கள். அவர் பதில் ஏதும் பேசவில்லை. அப்போது அவர்கள், ஒருவர் இராமநாதபுரத்திற்கே ராஜாவாக இருந்தாலும் எனக்கென்ன! என்னை யாராலும் எதுவும் செய்து விட முடியாது!” என்று உரக்கக்கூறினார்கள்.

அந்த செல்வந்தர், அவ்வூரில் நடத்தி வரும் மதரஸாவிற்கு வலீயுல்லாஹ் அவர்களை வரும்படி அழைத்தார். முதலில் மறுத்து விட்டார்கள். வலீயுல்லாஹ் அவர்களின் நெருக்கத்திற்குரிய பெரிய மனிதர்களில் சிலர் வேண்டிக் கொள்ள இவர்கள் அந்த மதரஸாவுக்குச் சென்றார்கள்.

வலீயுல்லாஹ் அவர்கள் மார்க்க ஷரீஅத்தையும்அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தையும் பெரிதும் போற்றிப் பின்பற்றி வந்தார்கள்.

அண்ணல் எம் பெருமான் அவர்களின் திருப்பெயரைக் கேட்டதுமே உடல் நடுக்க முறுவார்கள். அதனால் அவர்கள் நம்மை யாரும் போட்டோ எடுக்கக் கூடாது என்று மிகவும் கடிந்து சொல்லியபின்பும், ஒருவர் அவர்களுக்குத் தெரியாமல் போட்டோ எடுத்து விட்டதை அறந்து “பல்லக்கு தம்பியைப் போட்டோ எடுத்து விட்டார்கள் அதை வைத்திருக்கும் வீட்டில் முஸீபத்துதான் இறங்கும்” என்று கடிந்து கூறினார்கள்.

முஸ்லிம்கள் அனைவரும் ஒழுங்காக ஷரீஅத்தையும், சுன்னத்தையும் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதே அவர்கள் பெரிய விருப்பமாக இருந்தது. ஒரு சமயம் கொழும்பிலிருந்து வந்த பெரிய செல்வந்தரைப் பார்த்து கடைசிவரை பேசவேயில்லை. காரணம் அவர் பெருமானர் அவர்களின் சுன்னத்ப் பின்பற்றி தாடிவைக்கவில்லை என்பதே காரணமாம்.

"மார்க்கத்தை எளிமைப்படுத்துங்கள் என்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நபிமொழியை பின்பற்றுவதில் இவர்கள் மிகவும் அக்கறை காட்டினர்கள். இப்படி இருந்ததும் இன்றைய கால உலமாக்கள் மற்றும் பலர் மார்க்கத்தை பெரும் அலட்சியப்படுத்திவருவதைப் பார்க்கும் போது மனதிற்கு வேதனையளிக்கின்றது

ஒருநாள் ஒருநபர் தொழுது விட்டு நண்பரிடம் கேட்டார். "நீ தொழும்போது உன்மனம் ஊசலாட்டம் இல்லாது இருந்ததா?" என்று "இல்லை" என்று பதிலளித்துவிட்டு அதைப்பற்றி இருவரும் விரிவாக விவாதித்து விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். அதில் ஒருவர் மாலையில் வலீயுல்லாஹ் அவர்களைக் காண வந்தார். அவரைக் கண்டதும் வலீயுல்லாஹ் அவர்கள். அவர் காலையில் தம் நண்பருடன் விவாதித்த விவாதங்களை தம் உள்ளுணர்வால் அறிந்து கொண்டு யாருக்கோ சொல்வது போன்று "நாம் தொழும்போது நம் மனதில் நம்மை அறியாமல் பல எண்ணங்கள் வந்து ஊசலாடுமென்று அதனால் தொழுகை நிறை வேறாமல் போய்விடும். தொழுப் போகும் போது தொழுவதற்கு என்ற எண்ணத்தில் தானே ஒளு செய்து விட்டுச் செல்கிறோம். அப்படித் தொழும்போது வரும் ஊசலாட்டங்களைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. அதை ஏற்றுக் கொள்ள பேரருளாளனாகிய அல்லாஹ் போதுமானவன். நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். பலதைப்பற்றி யோசிக்க வேண்டாம்" என்று கூறினார்கள்.

அந்தக் குறிப்பிட்ட நபருக்கே பெரிய அதிர்ச்சியாகவும் ஆனந்தமாகவும் இருந்தது. இதுதான் வலிமார்களின் தனிப்பெரும் கருணை. (வருவார்கள்)

## *நபி மெழிகள்*

**கண்ணியம்**

வயது முதிர்ந்தவர்களையும், திருக்குர்ஆனைப் போதிப் பவர்களையும், மக்களுக்கு மத்தியில் நீதம் செலுத்தும் தலைவர்களையும், கண்ணியப் படுத்தியவர்கள் உண்மையில் அல்லாஹ்வையே கண்ணியப் படுத்தியவர்கள் ஆவார்கள்.

**மேலான மனிதன்**

இறையோனின், கட்டளைப் படி நடப்பதிலேயே, உடலாலும், உயிராலும், செல்வத்தாலும், முயற்சிசெய்யும் மூமினே மேலான மனிதனாவான்.

# சற்குரு சரித்திரம் 9

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி. ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

சிறகுகள் இல்லையே உடன் பறந்து போய்ப் பார்க்க என்று எண்ணிய துண்டு.

1979ஆம் ஆண்டு நான் என் மனைவியார், மகள்கள் நளிரா, ஆக்கிலா ஆகியோருடன் வெலிகமா சென்றிருந்த போது உம்முல்முஃமீன் தாயார் அவர்கள் நல்லபடி இருந்தார்கள். என் மனைவியாரை நன்குத் தெரியம். உம்முல்முஃமினின் தாயார் அவர்களும் என் மனைவிமக்கள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். அப்போது நமது அருமை ஷெய்குநாயகம் (ரலி) அவர்களின் பெரிய நானா மகளாருக்கு திருமணத்திற்காகத்தான் அங்கு போயிருந்தோம். மாப்பிள்ளை யார் தெரியுமா? இப்போது திருமுல்லை வாசல் தர்ஹா ஷரிபின் மாடியில் தங்கியிருப்பார்களே முஹ்ஸின் மௌலானா அவர்கள்தான். இவர்கள் யார் தெரியுமா நமது கண்மணி குதுபுல் அக்தாப் யாஸின் நாயகம் (ரலி) அவர்களின் தங்கை சித்தி ஜமிலா அவர்களின் மகன்.

அதுசமயம் சங்.தாயார் உம்முல் முஃமீன் (ரலி) அவர்கள் என் மூத்த மகளிடம் அடிக்கடி கேட்பார்பார்ககலாம். “யாருக்கு கல்யாணம்” என்பார்கள் அதற்கு என் மகள் நளிரா “முஹ்ஸின் மௌலானாவுக்கும் நதிஹா கண்ணே அக்கும் கல்யாணம்” என்பார்களாம். அம்மாவும் மற்றவர்களும் சிரித்து பூரித்து போவார்களாம். என் மனைவி, என்பிள்ளைகளுக்கும் தாயார் உம்முல்முஃமீன் (ரலி) அவர்களைக் கண்டு பேசி பழகும் பாக்கியம் கிடைத்து இருக்கிறதே என்று நினைக்கும் போது மிகவும் பேரானந்தமாக இருக்கிறது.

அந்த சமயம் நாங்கள் (என் குடும்பத்துடன்) ஒரு மாதம் தங்கியிருந்தோம். அங்கு கல்யாணத்திற்கு வருபவர்கள் பரிசுப் பொருட்களாக பீங்கான் பாத்திரம், ஜக், கோப்பை தட்டுகள் என்று நிறைய கொடுப்பது வழக்கம். அப்படி வந்த வற்றில் எங்களுக்கும் நிறைய பீங்கான் சாமான்களை கொடுத்தார்கள் நாங்கள் எடுத்துக்கொண்டு மாலை ரயிலில் ஏறி கொழும்பிற்கு வந்து விட்டோம். எங்களை நம் அருமை கண்மணி ஷெய்கு நாயகம் (ரலி) அவர்களின் மைத்துனர் நாஸிஹ் மாமாவுடன் தான் அனுப்பி வைத்தார்கள். மாமா அவர்களின் தெரிந்த வர் வீட்டில் இரவு தங்கினோம். மறுநாள் பகல் நேரத்தில்தான் விமானம்.

நம் அருமை ஷெய்கு நாயகம் (ரலி) அவர்கள் இரவோடு இரவாக பஸ்ஸில்

புறப்பட்டு கொழும்பிற்கு வந்து, நாங்க தங்கியிருந்த வீட்டிற்கு வந்து விட்டார்கள். எங்களுக்கு ஒரே ஆச்சரியம். என்ன வாப்பா நாயகம் வந்து இருக்கிறார்கள் என்று.

அப்போது அவர்களுக்கே உரித்தான சிரிப்புடன் "சிராஜுதீன் பீங்கான் சாமான்களை பத்திரமாக எடுத்து செல்ல வேண்டும் இல்லையென்றால் அவை உடைந்துபோகும், ஆதலால் நான் அவற்றை ஒழுங்காக பேக் செய்து தருகிறேன்" என்று கூறி எங்களிடமிருந்து பிங்கான் பாத்திரங்களை எங்கள் துணிகளுக் கிடையில் சுருட்டி வைத்து கட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். இதற்காகவே நம் அருமை வாப்பா நாயகம் (ரலி) அவர்கள் இரவோடு இரவக கொழும்பு வந்ததை எப்படி மறக்க முடியும். யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்!

நாங்கள் வெலிகமாவில் வாப்பா நாயகம் (ரலி) அவர்கள் வீட்டில் தங்கியுள்ள சமயத்தில்தான் என் மகள்கள் இருவருக்கும் காது குத்தப்பட்டது. நர்ஸ் வந்துதான் குத்திவிட்டார். பெரியவளுக்கு காதுகுத்தும்போது என் மகள் சிறியவளை (ஆக்கிலாவை) வாப்பா நாயகம் (ரலி) அவர்கள் தூக்கிக் கொண்டு வெளியே வந்து விட்டார்கள்.

"பெரியவளுக்கு காது குத்தும் போது அவள் அழுவாள், அதனால் இவளைத் தூக்கி வந்து விட்டேன்" என்றார்கள்.

தினமும் பிள்ளைகளுக்கு காதில் தேங்காய் எண்ணையை வைத்து விடுவார்கள் நம் அருமை ஷெய்கு நாயகம் (ரலி) அவர்கள். (வரலாறு வரும்)

---

> குழந்தைகளை மிகக் கவனமாக வளர்த்தல் வேண்டும். சிறு வயதிலேயே ஒழுக்கம், மரியாதை, பயபக்தி இவைகளை கொண்டு குழந்தைகளுக்குப் போதனை செய்வது மட்டுமல்லாமல், தாய்தந்தையருக்குப் பிள்ளைகள் பயந்தவர்களாகவும், அன்பும் மரியாதையும் உடையவர்களாகவும் வளர்த்தல் அவசியம். அடங்காப்பிள்ளைகளை அடித்தாவது பண்படுத்துவது மிக அவசியம். இல்லையாயின் வளரும்போது மிகக் கெட்டுவிடுவார்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. ஆகவே, மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். ஐவேளைத் தொழுகை, காலையில் குர்ஆன் ஓதுதல் முதலான அவசிய காரியங்கள் இப்போதே பின்பற்றப்படுதல் அவசியம். பிள்ளைகளை கூடாத பிள்ளைகளுடன் அதிகம் பழக வைப்பதும் நல்லதல்ல. மாலை 5 மணிக்குப் பிறகு பிள்ளைகளை வெளியனுப்புதல் பிள்ளைகள் நற்குணங்களுக்கும் நற்செயல்களுக்கும் பங்கத்தை உண்டு பண்ணி விடும்.

*சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

### மேட்டூர் இந்திரா நகரில் சந்திரர் தரிசனம்!

# திருநபிகளின் திருப்பேரரும், திருக் குடும்பத்தாரும் மேட்டூர் விஜயம்!

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத் திருப்பேரர் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களும், நமது உயிரினும் மேலான அஹ்லுல்பைத் என்னும் புனிதக் குடும்பத்தாரும், மதுரஸத்துல் ஹஸனைன் பீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரியின் முதல் பட்ட ஆலிமும் – யாஸீனிய் மௌலவிகள் பேரவை தலைவருமான மௌலவி A.கலீல் ரஹ்மான் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் புதிய இல்லத் திறப்பு விழாவிற்காக சேலம் மாவட்டம் மேட்டூருக்கு விஜயம் புரிந்தார்கள்.



சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களால் “பைத்துர்ரஹ்மா” என்று பெயரிடப்பட்ட அப்புதிய இல்லத்திற்கு, சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களும், புனித திருக்குடும்பத்தாரும் வருகை புரிந்தபோது, அன்னவர்களைச் சங்கையுடன் வரவேற்கும் வண்ணம், ஆங்குக் குழுமியிருந்த ஆத்துமச் சகோதரர்களும், யாஸீனிய் பேரவை மௌலவிமார்களும் கண்ணிய தொனியில் மேன்மைமிக்க “யா நபி ஸலாம் அலைக்கும்” பைத் ஓதி, சிறப்பான வரவேற்பளித்தார்கள்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுக்கு, “பைத்துர்ரஹ்மா” இல்லத்தார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதைத் தொடர்ந்து, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், தங்களது அருட்திருக்கரங்களால், “பைத்துர்ரஹ்மா” புதிய இல்லத்தைச் சிறப்பாகத் திறந்து வைத்து, நாயகமவர்களும் அவர்களைத் தொடர்ந்து திருக்குடும்பத்தாரும் பரக்கத்துடன் உள் நுழைய, பேரொளி இல்லம் முழுக்கப் பரவி நின்ற பரவசத்துடன், அவர்களைத் தொடர்ந்து ஆத்துமச் சகோதரர்கள் அனைவரும் உள்ளே சென்றனர்.

புதிய இல்லத்தில் நாயகம் அவர்களுக்கும், திருக்குடும்பத்தாருக்கும் குழுமியிருந்த முரீதீன்கள், தமிழ் பக்தர்கள் அனைவரது சார்பாகவும் பொன்னாடை அணிவிக்கப்பட்டது. சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுக்கு, புனித தர்பார் நாயகமவர்களின் தர்கா ஷரீபின் திட்ட வரைபடம் அலங்கரிக்கப்பட்ட நினைவுப்பரிசு (Souvenir) சமர்ப்பிக்கப்பட்டது. புனித திருக்குடும்பத்தாருக்கு புனித தர்பார் நாயகமவர்களின் தர்கா ஷரீபின் திட்ட வரைபடம், புகைப்படச் சட்டகம் வழங்கப்பட்டது. புதிய இல்லத் திறப்பு விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் சிறிய அளவிலான அதே புகைப்படச் சட்டக (Photo Frame) வடிவில் வழங்கப்பட்டது.

நிறைவாக, சங்கைக்குரிய ஷைகு நாயகம் அவர்களின் அருள் துஆவுடனும் சங்கைமிக்க ஸலவாத்துடனும் ‘‘பைத்துர்ரஹ்மா’’ புதிய இல்லத்திறப்பு விழா நிகழ்ந்தேறியது. துஆவில், புதிய இல்லத்தில் இறையருள் நிறையவும், அனைத்து மக்களும் சமய ஒருமைப்பாடுடனும் சமத்துவ சகோதரத்துடனும் அன்பால் இணைந்து வாழவும் வேண்டிப் பிரார்த்திக்கப்பட்டது.

சங்கைக்குரிய நாயகம் அவர்களின் வருகையின் போதும், விடைபெற்றுச் செல்லும் போதும் அக்கம் பக்க வீட்டார் அனைவரும் சங்கைக்குரிய நாயகம் அவர்களின் திருப்பார்வை பெறுவதற்காக வரிசையில் நின்று தரிசனம் பெற்று அகமகிழ்ந்தனர். அந்தத் தருணம், மேட்டூர் இந்திரா நகரே சந்திரர் ஜோதியில் பிரகாசித்தது போலிருந்தது. அல்ஹம்துலில்லாஹ்.

சங்கைக்குரிய ஷைகு நாயகம் அவர்களால் திறந்து வைத்து நல்லாசி வழங்கப்பட்ட ‘‘பைத்துர் ரஹ்மா’’ புதிய இல்லத்தில், சங்கைக்குரிய தர்பார் நாயகமவர்களின் பேரன்பும் பேரருளும் என்றென்றும் நின்று நிலவட்டுமாக! (ஆமீன்). அப்புதிய இல்லத்தில் குடியேறியுள்ளோரும் அவர்களின் சந்ததிகளும் தர்பார் நாயகமவர்களின் இரட்சண்ய நிழலில் என்றென்றும் இளைப்பாறுவார் களாக!! (ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்).

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், தங்களது இப்புனித விஜயத்தின்போது, மேட்டூர் ஆத்தும சகோதரர் சாகுல் ஹமீது ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் இல்லத்திற்கும், மௌலவி K.முஹம்மது சதக்கத்துல்லாஹ் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் இல்லத்திற்கும் விஜயம் செய்து அருள்புரிந்தார்கள்.

**தகவல் : மௌலவி கலீல் ரஹ்மான் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய், மேட்டூர்.**

## மறைஞானப் பேழை சந்தா செலுத்திவிட்டீர்களா?

நிகழ்ச்சியின் கிரீடம் போன்ற முத்திரை நிகழ்வாக, புனிதமிக்க விழாவின் தலைவர் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் **யாஸீன் அலி மௌலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் சீரிய தலைமையுரை:

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரசூலிஹில் கரீம் வ அலா ஆலிஹி வ ஸஹ்பிஹி அஜ்மஈன்.

இன்று பட்டம் பெற்றுள்ள யாஸீனிய்கள் அனைவரும் பெருமையான மேலான யாஸீனிய்களாக வெளியாகி இருக்கின்றீர்கள்.

இதனை இத்துடன் நிறுத்திவிடாமல், இன்னமும் மென்மேலும் இதைக் கொண்டு சிந்தித்து, இதைக் கொண்டு தவ்ஹீதுடைய ஞானங்களைப் பெற்று, மென்மேலும் வளர்ச்சியடைவதற்கும், சமுதாயத்தில் பேரும் புகழும் பெற்று, நீண்ட ஆயுளுடன் இருப்பதற்கும் வல்ல ஹக்கு அருள்புரிவானாக.

அதாவது, இதில் முதல் படியே ஞான விஷயங்களைக் கொண்டு சிந்திப்பதுதான். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஞான விஷயங்களைச் சிந்திப்பது ஒரு வருட இபாதத்தைவிடப் பாக்கியமானதாக இருக்கும், மேலானதாக இருக்கும் என்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

அப்படியென்றால், இதனைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. இபாதத் கூடாது / தேவையில்லை என்று தவறாக எடுத்துக் கொள்ள முடியாது. அது எப்படியென்றால், இபாதத்து செய்யும்போது நாம் தொழுகிறோமோ, ஓதுகிறோமோ,

நோன்புப் பிடிக்கிறோமோ, ஹஜ்ஜுக்குப் போகிறோமோ அவையெல்லாம் எதற்காகச் பண்ணுகிறோம் என்று தெரிந்துகொண்டு அதனை முழுமையாகச் செய்ய வேண்டும். அதுதான் பொருள். அவ்வாறு தெரிந்துகொண்டு இபாதத்துச் செய்தால், அதனுடைய நன்மைகள் பல மடங்கு நன்மைகளாக உங்களுக்கு அமையும்.

இந்த மதுரஸாவிற்கு உதவியாக இருக்கின்ற ஆலோசகர் டாக்டர் ஷைகு அப்துல்லா ஜமாலி ஹள்ரத் அவர்களுக்கும் பிரின்ஸிபால் அவர்களுக்கும் மற்ற உஸ்தாதுமார்களுக்கும் எம்முடைய வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டு, மென்மேலும் இந்த மதுரஸா, வாப்பா நாயகம் அவர்கள் எப்படிச் சொல்லியிருக்கின்றார்களோ, அதைப் போலவே, அதைவிட மேலாகவே வளர்ச்சி அடைவதற்கு வல்ல ஹக்கு கிருபை செய்வான் என்று கூறி எம்முடைய உரையை நிறைவு செய்து கொள்கிறோம்.

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹூ.

– என்பதாக, சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் தலைமையுரை அருளுரையாக நிறைவுற்றது.

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரியில் ஓதி நிறைவாக, குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் **யாஸீன் அலி மௌலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் 12ஆவது யாஸீனிய் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற யாஸீனிய் மௌலவிமார்கள்:

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **A.அபுபக்கர் சித்திக்** ஆலிம்

யாஸீனிய், B.B.A., (Final Year)

த/பெ ஜனாப். A.அஸ்கர் அலி, அடியனூத்து, திண்டுக்கல் மாவட்டம்.

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **S.முஹம்மது யஹ்யா** ஆலிம்

யாஸீனிய், D.C.E., (Civil) (Final Year)

த/பெ ஜனாப். A.சாகுல் ஹமீது, ஒத்தக்கடை, மதுரை மாவட்டம்.

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **J.பைசல் ரஹ்மான்** ஆலிம்

யாஸீனிய், B.Com., (Final Year)

த/பெ ஜனாப். A.ஜாபர் அலி, கிச்சிப்பாளையம், சேலம் மாவட்டம்

.

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **S.முஹம்மது நவ்சாத்** ஆலிம் யாஸீனிய்,

த/பெ ஜனாப். S.சையது அலி பாஷா, மங்களம், திருப்பூர் மாவட்டம்.

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **N.முஹம்மது தாஹா** ஆலிம் யாஸீனிய், D.C.E., (Civil) (Final Year)

த/பெ ஜனாப். ய.நூர் முஹம்மது, இனாம்குளத்தூர், திருச்சி மாவட்டம்.

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **J.ரஹ்மான் ஷா** ஆலிம் யாஸீனிய், D.C.E., (Civil) (Final Year)

த/பெ மர்ஹூம். A.ஜாஃபர் அலி, திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்.

❖ மௌலவி. (அஃப்ழலுல் உலமா) **A.அப்துல் ரஹீம்** ஆலிம் யாஸீனிய், B.Com., (Second Year)

த/பெ மர்ஹூம். M.அப்துல் காசிம், மேலூர், மதுரை மாவட்டம்.

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரியில் ஓதி நிறைவாக, குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் **யாஸீன் அலி மௌலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் முதலாவது ஹாஃபிழ் பட்டம்பெற்ற ஹாஃபிழ்மார்கள்:

❖ அல்ஹாஃபிழ். **M.பஹதுர் ரஹ்மான்,**

த/பெ ஜனாப். A.முஜிபுர் ரஹ்மான், சாலையூர், இளையான்குடி., இராமநாதபுரம் மாவட்டம்.

❖ அல்ஹாஃபிழ். **P.S.முஹம்மது அஃப்ராஹ்,**

த/பெ ஜனாப். P.A.சையது அபூதாஹிர், பள்ளப்பட்டி, கரூர் மாவட்டம்.

❖ அல்ஹாஃபிழ். **M.J.முஹம்மது முஜம்மில்,**

த/பெ ஜனாப். M.S.ஜாஃபர் சாதிக் அலி, பள்ளப்பட்டி, கரூர் மாவட்டம்.

(தொடர்ந்து பேசுவார்கள்)

நெகிழ்ச்சித் தொகுப்பு :

இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி,

M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி

# பொறுமை காத்த பருவ மழை!

நமது உயிரினும் மேலான சங்கைக்குரிய பெரிய வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள் முதலாம் ஆண்டு கந்தூரி விழா – கொடியேற்ற நிகழ்வுக்காக, சென்ற 11.12.2024 (புதன்கிழமை) அன்று, ஒருநாள் – திருநாள் பயணமாக, நமது சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள், இந்திய விஜயம் மேற்கொண்டு, புனித கந்தூரி விழாக் கொடியை தங்களது மேன்மைமிக்க திருக்கரங்களால் ஏற்றிவைத்து அருளினார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

மறுநாள், பயணம் செல்வதற்கு முன் ஜியாரத் செய்வதற்கு வந்திருந்தபோது கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. தர்கா அமைந்துள்ள மைதானப் பகுதி முழுவதும் கால்வைக்க முடியாத அளவுக்கு சதுப்பு நிலம் போலக் காட்சியளித்தது. அந்த வாரத்தில், திருச்சியில் மட்டுமல்ல தமிழகம் முழுவதுமே மழை மிரட்டிக் கொண்டிருந்தது. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது. ஜியாரத்தை முடித்துக் கொண்டு வாகனத்தில் ஏறுவதற்கு முன்னர், நமது உயிரினும் மேலான சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்கள், அங்கு குழுமியிருந்த ஆத்தும சகோதரர்கள் – மதுரஸா மாணவர்கள் மத்தியில், மழை நின்றுவிடும் என்பதாக திருவாக்கு அருளினார்கள். இந்தச் செய்தியை ஆத்துமச் சகோதரர் மௌலவி சையது இப்றாஹீம் ஆலிம் யாஸீனிய் அவர்கள் மூலம் அன்று மாலை (12.12.2024 வியாழக்கிழமை) கேள்விப்பட்டு மகிழ்ந்தேன்.

அப்போதும் கூட மழை விட்டு விட்டு தூறிக் கொண்டே இருந்த மழை, அன்றிரவே தன் பொழிவை நிறுத்திக் கொண்டது. மறுநாள் இளவெயில் அடித்தது. அதற்கு அடுத்தநாள், 14.12.2024 சனிக்கிழமை நான் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது காலை 10 மணியளவில் நன்றாகவே வெயில் அடித்தது. சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் திருவாக்குக்கேற்ப மழை பணிந்து கொண்டதையெண்ணி, மனதிற்குள் அப்படியொரு மகிழ்ச்சி. இன்னும் 8 – 10 நாட்கள் வரை இப்படியே மழையின்றி இளவெயில் நீடித்தால், புனித கந்தூரி விழா பணிகளும் எவ்வித இடையூறுமின்றி சிறப்பாக நடைபெறும். விஜயம் செய்ய உள்ள புனித திருக்குடும்பத்தார், கலீபாக்கள், இலங்கை முரீதுப் பிள்ளைகள், பல்வேறு ஊர்களிலிருந்தும், பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆவலுடன் வருகைதர உள்ள சகோதரர்கள் அனைவரும் சிரமமின்றி, மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வார்களே? மழை இப்படியே பொறுமை காக்கக் கூடாதா என்ற சிந்தனை துளிர்த்தது. அப்போது எழுதப்பட்ட கவிதை இதோ:

# பருவ மழையே கொஞ்சம் பொறு!

பருவ மழையே கொஞ்சம்பொறு
பத்து நாட்கள் நெஞ்சம்பொறு
குருபிரான் கந்தூரி விழாவந்து
கூடிப் பெய்திடும் ஆசைஅறு
வருவர் வாப்பா நாயகமும்
வாஞ்சை மிகுதிருக் குடும்பத்தார்
வருவர் இலங்கை பிள்ளைகள்
மேலும் பன்னாடு முரீதுகள்

சந்தன முல்லை அலங்காரம்
சங்கை சன்னதி இலங்கிடவே
பந்தல் பரப்பில் நிலம்சமைத்து
பாங்காய் இருக்கை அதிலமைத்து
வந்திடும் விருந்தினர் அனைவருக்கும்
வகையாய் கந்தூரி உணவமைத்து
எந்தை குருபிரான் தலைமையிலே
ஏக சிறப்புடன் விழாநடக்கும்

மீலாதில் ஒருமுறை இப்படித்தான்
மிரட்டிட வந்தாய் அப்போதுனை
விழாமல் விரட்டினர் குருபிரானே
விரண்டு ஓடினாய் நினைவிருக்கா?
வாப்பா நாயகம் வாக்கிருக்கு!
வழிந்திட உனக்குப் போக்கிருக்கு!
வாய்ப்பாய் திருச்சியை விட்டுவிடு!
வேறு பக்கம் கொட்டிவிடு!

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் திருவாக்கின்படி, மழை கந்தூரி நிறைவடைந்து பெரும்பாலோனோர் ஊர் போய்ச் சேரும்வரை மழை திருச்சியின் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை. கந்தூரி தினத்திற்கு முந்தைய நாள் கூட சென்னையிலும்தூத்துத்துகுடியிலும் வெளுத்து வாங்கிய மழை, திருச்சியின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அல்ஹம்துலில்லாஹ்.

29.12.2024 அன்று வியாழக்கிழமை தர்பார் ஷரீஃபில் ராத்திபு மஜ்லிஸ நிறைவடைந்த பிறகு, மதிப்பிற்குரிய நாழிர் ஹள்ரத் ஸயீது முஹம்மது (எனது சின்னத்தர்) அவர்கள், என்னத்தா, பாட்டெழுதி மழையை நிறுத்தி விட்டீர்களே? என்று வேடிக்கைக்காகக் கேட்டார்கள். நான் உடனே, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் திருவாக்கின்படி நின்று விட்டது. என் கவிதை அதற்கு ஆமீன் தான் சொன்னது என்றேன். அதற்கு அருகிலிருந்த மதிப்பிற்குரிய குவைத் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை தலைவர் ஹமீது அண்ணன் அவர்கள், காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதைதான் என்று கூறிச் சிரித்தார்கள். அதற்கு நானும், பனம்பழம் ஏற்கனவே விழுந்துவிட்டபிறகு, கவிதை என்னும் காக்கையை அந்த இடத்தில் பொருத்திக் கொண்டேன் என்றேன். நாயகமவர்களின் நல்லருளாலே நடந்தவையே எல்லாம். அல்ஹம்துலில்லாஹ்.

நாம் அனைவருக்கும் தெரிந்த விசயம் தான், ஏற்கனவே இலங்கை மீலாது கந்தூரி விழாவின்போது, மிரட்ட வந்த மழையை, சங்கைக்குரிய பெரிய வாப்பா நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்கள், திருப்பியனுப்பிய நிகழ்வை நினைவூட்டும் வண்ணமாக, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் நல்லாட்சியில் நிகழ்ந்துள்ள இந்த மழை நிகழ்வும் மனதில் ஆழப் பதிந்துவிட்டது.

மகத்துவமிக்க தர்பார் நாயகமவர்களின் அற்புதங்கள் – அருட்கடாட்ச நிகழ்வுகள் அன்றும், இன்றும், என்றும், என்றென்றும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**– இளங்கவி. அ. நைனார் முஹம்மது அன்சாரி**

**ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி.**

---

**திருக்குர்ஆன் ஷரீஃபை எதற்கும் ஒப்பிட முடியாது. திருக்குர்ஆன் ஷரீஃப் என்பது பரிபூரணத்திலிருந்து பரி பூரணமாய் பரிபூரணமாகவே வெளியானது. திருக்குர்ஆன் ஷரீஃப் என்பதே** Universe **பிரபஞ்சம் தான். திருக்குர்ஆன் ஷரீஃப் படைக்கப்பட்டதோ சமைக்கப்பட்டதோ அல்ல. திருக்குர்ஆன் ஷரீஃபில் கூறப்படும் எல்லாக் கருத்துக்களும் எக்காலத்திற்கும் பொருத்தமானதாகவே உள்ளன.**

*( சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் )*

# அபூஹுரைரா அத்-தவ்ஸீ (ரலி)

தொகுப்பு: ரகுமத் ராஜகுமரன்

யா அல்லாஹ்! நான் உன்னுடன் இருக்கவே விரும்புகிறேன். தயவுசெய்து நீ என்னை உன்னுடன் வைத்துக்கொள்ள விரும்புவாயாக!ஆமீன்.

அரேபியாவில் தவ்ஸ் என்றொரு கோத்திரம் இருந்தது. தெற்குப் பகுதியில் செங்கடலின் கரையோரம் அமைந்திருந்தது அவர்களது ஊர். அந்தக் கோத்திரத்தின் முக்கியப்புள்ளி துஃபைல் பின் அம்ரு ரலியல்லாஹு அன்ஹு.

மக்காவிலுள்ள குரைஷிகளின் பேச்சைக் கேட்டு, நபியவர்களின் பிரச்சாரம் தப்பித் தவறிக்கூட காதில் விழுந்துவிடக்கூடாதே என்று பஞ்சை எடுத்து அடைத்துக்கொண்டு கஅபாவிற்குச் சென்றவர் அவர். ஆனால் அதையும் மீறி உண்மை அவர் செவியுள் நுழைய இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

மட்டுமல்லாது, அல்லாஹ்வின் தூதரே! என் குலத்தவர் என்னைப் பெரிதும் மதிக்கக்கூடியவர்கள்.நான் இப்பொழுது அவர்களிடம் சென்று அவர்களை யெல்லாம் இஸ்லாத்திற்கு அழைக்கப் போகிறேன். அனுமதி தாருங்கள் என்று நபியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு திஹாமாவுக்குத் திரும்பினார் துஃபைல்.

மக்காவில் தாம் கண்டுணர்ந்து வந்ததை அவர் பிரமிப்பாய் விவரித்துக் கூறியதைக் கேட்டு அவரின் தந்தை, மனைவி தவிர வேறு யாரும் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை. அவர் சொல்வதைக் காதிலும் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால் ஓர் இளைஞர் இருந்தார். அவர் பெயர் அப்துல் ஷம்ஸ். படு சூட்டிகை, கெட்டி. அவர் மட்டும் சட்டென்று பிடித்துக் கொண்டார் அந்தச் செய்தியை. இது எனக்குப் புரிகிறது. உன்னதம் இது. நான் ஏற்றுக் கொள்கிறேன் துஃபைல்

சில காலம் கழித்து துஃபைல் பின் அம்ரு, அப்துல் ஷம்ஸையும் அழைத்துக் கொண்டு நபியவர்களைச் சந்திக்க மக்காவுக்கு வந்தார். அப்பொழுதுதான் அந்த இளைஞருக்கு நபியவர்களுடனான முதல் நேரடி அறிமுகம் ஏற்பட்டது.

இந்த இளைஞர் யார்? விசாரித்தார்கள் நபியவர்கள். என் கோத்திரம்தான். புத்திசாலிப் பையன். உடனே ஏற்றுக்கொண்டார் என்று அறிமுகப்படுத்தினார் துஃபைல்.

உன் பெயர் என்ன?

அப்துஷ் ஷம்ஸ்.

அதன் பொருள் சூரியனின் அடிமை என்பதால், அது வேண்டாம். இன்றிலிருந்து உன் பெயர் அப்துர் ரஹ்மான்– அருளாளனின் அடிமை என்று பெயர் மாற்றினார்கள் நபியவர்கள்.

என் தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும், அல்லாஹ்வின் தூதரே! நான் இன்றிலிருந்து அப்துர்ரஹ்மான் என்று உவந்து போனார். பிற்காலத்தில் அபூஹுரைரா என்ற பெயரில் மிகவும் பிரபல்யமடையப் போகிறார்.

அப்துர் ரஹ்மான், அபூஹுரைராவாக மாறியது? அது ஒரு பூனைக்குட்டியால் நிகழ்ந்தது.

அவர் இளவயதில் பூனைக்குட்டி ஒன்றை வளர்த்து வந்தார். அதன்மீது அலாதிப் பிரியம். அதனுடன் விளையாடுவது, எங்குச் சென்றாலும் அதைக் கொண்டு செல்வது என்று பூனையும் கையுமாக இருந்துவர, அவரின் நண்பர்கள் செல்லமாக அபூஹுரைரா என்று பெயர் சூட்டி விட்டார்கள். ஹுரைரா என்றால் பூனைக்குட்டி.

அரபுக் குலத்தில் இன்னாரின் தந்தை என்று அழைப்பதற்கும் இன்னதின் பிரியர் எனக் குறிப்பதற்கும் அபூ எனும் சொல் வழக்கிலிருந்தது. அதனால் பூனைக்குட்டியின் பிரியர்.

பிற்காலத்தில் அவர் மதீனாவில் வாழும்போது நபியவர்கள் இவரை அவ்வப்போது அபூஹிர் (பூனைப் பிரியரே!) என்று செல்லமாய் அழைக்க, அபூஹுரைராவுக்கு அது மிகவும் பிடித்துப்போனது. அப்படியே பூனைக்குட்டியின் பிரியராகப் பெயர்பெற்றுப் போனார் அபூஹுரைரா.

அப்படிவந்து ஒட்டிக்கொண்ட அந்தப் பெயர் இஸ்லாமிய வரலாற்றின் புகழ்பெற்றப் பெயராக அமைந்து ஹதீத் நூல்கள் அனைத்திலும் மிகமுக்கியமான பெயராக நிலைத்துப்போனது. அது, பெயர் காரணத்தினால் அல்ல. கல்வியின் நிமித்தம் அவர் காட்டிய காட்டுத்தனமான உழைப்பு, அர்ப்பணிப்பு என்று அப்பெயருக்குப் பின்னால் சில அம்சங்கள் ஒளிந்து கொண்டுள்ளன. பார்ப்போம். அதற்குமுன்.

ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டின்போது மதீனா வந்தடைந்திருந்தார் ஓர் இளைஞர். இஸ்லாம் அவரை அவர் பிறந்து வளர்ந்த ஊரைவிட்டு அங்கு இழுத்து வந்திருந்தது. திருமணம் ஆகாத இள வயதினரான அவருக்கு இருந்த ஒரே உறவு வயதான அவரின் தாய்.

நபியவர்கள் மதீனாவுக்குப் புலம்பெயரும் முன்பே அந்த இளைஞர் இஸ்லாத்தை ஏற்றிருந்தாலும் அவரின் அம்மா மட்டும் அந்தப் புது மதம்

உன்னுடனே இருக்கட்டும்; எனக்கு வேண்டாம் என்று இருந்துவிட்டார். ஆனால் சும்மா இல்லை. கோபம் இருந்தது; தன் மகன் தமது மூதாதையர் மார்க்கத்திலிருந்து வழி தவறிப் போய்விட்டானே என்று நிறைய கோபம் இருந்தது.

அதே நேரத்தில் மகனுக்கோ அம்மாவின் மீது அளவற்ற அக்கறை. இறைவனுக்கு இணை வைத்து, உருவ வழிபாட்டில் மூழ்கிப் போயிருக்கும் தன் தாய், மறுமையில் நிரந்தர நட்டத்தை அடையப்போவதை அவரால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

நாள்தோறும் தவறாமல், அம்மா! ஏக இறைவனை ஏற்றுக் கொள்ளுங்கள். முஹம்மது நபி அல்லாஹ்வின் இறுதித்தூதர் என்பதை உணருங்கள் என்று வாய்ப்பாடுபோல் அறிவுறுத்திக் கொண்டே இருந்தார் அவரும்.

அதையெல்லாம் கேட்டு ஆத்திரம்தான் அதிகமாகும் அம்மாவுக்கு. முகம் வேகமாக மறுபுறம் திரும்பிக்கொள்ளும். அதைக்கண்டு தொந்தரவு செய்யாமல் வருத்தத்துடன் சென்றுவிடுவார் மகன். பிறகு, அன்றோ, அடுத்த நாளோ அதே கதை மீண்டும் தொடரும்.

ஒருநாள்– கோபத்தில், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அவச்சொல் சொல்லிவிட்டார் அந்த மாது. அனைவரையும் விட, அனைத்தையும் விட நபியவர்கள் மேல் அப்பட்ட பாசமும் நேசமும் கொண்டிருந்த அந்த இளைஞர் அப்படியே துடிதுடித்துப்போனார்.

தம்மைத் திட்டியிருந்தால்கூட பொருட்டற்றுப் போயிருக்கும் அவருக்கு. துடைத்துவிட்டுப் போயிருப்பார். அல்லாஹ்வின் தூதரைப் பற்றிய அவச்சொல் கேட்க நேர்ந்த அவலத்தில் அவருக்கு ஆத்திரத்திலும் கைச்சேதத்திலும் கண்ணிலிருந்து பொத்துக்கொண்டு கொட்டியது நீர். இன்னது செய்வது என்று அறியாமல் நபியவர்களிடம் ஓட,

ஏன் இந்த விம்மலும் அழுகையும்?என்று கரிசனமாய் விசாரித்தார்கள் நபியவர்கள்.

அல்லாஹ்வின் தூதரே! எப்படியும் என் தாய் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் தொடர்ந்து முயன்று கொண்டே இருந்தேன். அவரும் விடாது நிராகரித்துக்கொண்டே இருந்தார். ஆனால் இன்று தங்களைப்

பற்றி அவதூறு சொல்லிவிட்டார். அவரது மனத்தை இஸ்லாத்தை நோக்கித் திருப்ப அல்லாஹ்விடம் இறைஞ்சுங்கள் என்று கண்ணீர் கொப்பளிக்க விண்ணப்பித்தார் மகன்.

இறைஞ்சினார்கள் நபியவர்கள். பாரம் இறங்கி, மனம் இலேசானது அவருக்கு. இல்லம் திரும்பினார். வந்தால், வீட்டின் கதவு அடைத்திருந்தது. உள்ளே ஏதோ நீர் சிதறும் அரவம். ஒன்றும் புரியாதவர் வீட்டின் உள்ளே நுழைய முயல, உத்தரவு வந்தது, உள்ளே வராதே. அங்கேயே நில்! திகைத்துப்போய் நின்ற இடத்திலேயே நின்றார் அவர்.

சற்று நேரம் கழித்து கதவு திறந்தது. குளித்து, உடைமாற்றி, புத்துணர்வுடன் இருந்தார் அபூஹுரைராவின் தாய். அடுத்து அவர் கூறியதுகேட்டு, அபூஹுரைராவின் உடலைத் தொற்றியது அந்தப் புத்துணர்வு.

வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறில்லை. முஹம்மது அல்லாஹ்வின் தூதர்.

தம் தாய் கூறிய வாசகம் கேட்டு மீண்டும் கண்களில் கண்ணீருடன் ஓடினார் இறைத் தூதரிடம். இம்முறை வழிந்தது ஆனந்தக் கண்ணீர்.

அல்லாஹ்வின் தூதரே! நற்செய்தி அறியுங்கள். அல்லாஹ் தங்களின் பிரார்த்தனையை அங்கீகரித்தான். அபூஹுரைராவின் தாயை இஸ்லாத்தை நோக்கிச் செலுத்திவிட்டான். என்னையும் என் தாயையும் இறை நம்பிக்கைக் கொண்டவர்களின் அன்பிற்கு உரியவர்களாக ஆக்கி வைக்கும்படி அல்லாஹ்விடம் இறைஞ்சுங்கள்.

நபியவர்கள் இறைஞ்சினார்கள். யா அல்லாஹ். உன்னுடைய இந்த அடிமையையும் அவர் தாயையும் உன் நம்பிக்கையாளர்களுக்கு உவப்பானவர்களாக ஆக்கு. நம்பிக்கையாளர்களை இந்த இருவருக்கும் உவப்பானவர்களாக ஆக்கு.

இறைத்தூதரின் மீது பாசம் என்றால் பாசம், அப்படியொரு பாசம் தோன்றி உருவானது அபூஹுரைராவுக்கு. அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பதில் அவர் கண்கள் அயர்வதே இல்லை. நபித்தோழர்கள் அனைவரிடமும் இத்தகு குணாதிசயம் பொதுவாய்ப் பரவி இருந்ததாகத்தான் வரலாறு அறிவிக்கிறது.

(இன்ஷா அல்லாஹ்– அடுத்த இதழில் காண்க)

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## கதைகள்

அரபி இலக்கியத்தில் கதைகளும் இடம் பெற்றன. காதல், யுத்தம், வீரம், உதாரணம், ஒப்புபோன்றவைகளில் சிறந்த இலக்கியப் புத்தகங்கள் எழுதப்பட்டிருந்தன. ஆயிரத்தோரிரவு (الف ليلة و ليلة) கலீலா வதிம்னா (كليلة ودمنة) முதலான தத்துவ இலக்கியப் பாடப் புத்தகங்களும் மகாமாத் எனக் கூறப்படும் சிறுகதைத் தொடர் நூல்களும் அறிவையும், இலக்கிய வளர்ச்சியையும் அடிப்படையாய்க் கொண்ட புத்தகங்களும் அதிகம் கோக்கப்பட்டன. இவை இன்று அரபிக் கலையை இலட்சணப்படுத்துகின்றன.

## துருக்கியர் காலம்

பக்தாத் வீழ்ச்சியடைந்து துருக்கியர் இஸ்லாமிய கிலாபத்தின் பாதுகாவலர்களான போது அறபி மொழியின் இலக்கியத்தரம் உயர்ந்து வந்தது. உதுமானிய அரசர்களே அரபியப் புலவர்களாயும் ஆசிரியர்களாயுமிருந்தனர்.

இமாம் பூஸீரியும் பிரபலப் பிரசிங்கி இப்னு நபாதாவும் மிஸ்ரில் மிக உயர்ந்த இலக்கிய வள்ளல்களாயிருந்தனர். பூஸீரி அவர்களின் புர்தா, ஹம்ஸிய்யா முதலான பாடல்கள் நபிகள் பெருமானாரின் சீவிய சரித்திரத்தில் ஒப்பற்ற பொக்கிஷங்களாய் இன்றும் முஸ்லிம்களால் போற்றப்படுகின்றன. இப்னு நபாத்தாவின் ஜு஼்ம்ஆப் பிரசங்கங்கள் இஸ்லாமிய உலகெங்கும் கதீப்களால் குத்பாப் பிரசங்கமாக ஓதப்பட்டு

வருகின்றன. அந்த குத்பாப் பிரசங்கங்கள் இஸ்லாமிய இலக்கியப் போதனைகளில் மிகச் சிறந்தனவாய்ப் போற்றப் படுகின்றன.

இப்னுமாலிக் இலக்கணத்தில் அல்பிய்யாவெனும் கிரந்தத்தைப் பாடினார். பைரோஸா பாதீ காமூஸ் எனும் மிகப் பெரிய அகராதியை எழுதினார்.

கமாலுத் தமீரி சீவவர்க்க சரித்திரத்தையும் அபுல்பிதா (ابوالفدى) என்பவர் பூமி சாத்திரம், வானவியல், நகர நிர்மாண சாஸ்திரம் ஆகியவற்றில் அதிக நூல்கள் எழுதினார். ஐரோப்பியர்கள் அப்புத்தகங்களை மொழிபெயர்த்துப் பயனடைந்தனர். ஸய்யிதா ஆயிஷதுல் பாஊனிய்யா என்ற பெண் கவியரசி குஸ்தலானீ இமாம் அவர்களின் மாணவியாவார். பெருமானார் அவர்கள் மீது துதி பாடியும் அவர்கள் சரித்திரத்தை சிறப்பித்துக் கூறியும் புத்தகங்கள் எழுதியுள்ளார். இலக்கியம், கவி புனைதல் இவைகளில் மிகவும் சிறந்து விளங்கினார். பக்தி மிக்கவராயு மிருந்தார். பெருமானார் அவர்களைப்பற்றி அப்பெண் பாடிய பிரபந்தத்தில் உள்ள ஒரு பாடலில் ஓர் அடி.

قالوا هوالغيث قُلت الغيث آونة

يَهْمِيْ وَغَيْث نداه لايزال همى

அவர்களை மழையென்று கூறுகிறார்கள். மழைசில வேளைதான் பெய்யும் என்று நான் சொன்னேன். அவர்களின் கையின் மழையோ என்றும் பெய்து கொண்டே இருக்கும். என்னே ஒப்பின் திறமை.

## புதிய யுகம்

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலே மிக வேகமாய் முன்னேற்றமடைந்து வந்த அரபிக்கல்வி அபிவிருத்தியில் பிற்போக்கும் தயக்கமும் தொட்டன. மேல் நாடுகளோவெனில் மிக வேகமாய் எல்லா விதஅறிவுத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டே யிருந்தன. பிரெஞ்சு நாகரிகமும் பிரித்தானிய நாகரிகமும் எகிப்தைப் பற்றிக் கொண்டன. நெப்போலியன் பூனாபர்த் கி.பி 1798 இல் எகிப்தில் மேல்நாட்டுக் கல்வி முறையைப் புகுத்தினார். குதைவீ அரச குடும்பம்

*விழிப்புக் கொண்டு எகிப்தில் அறிவபிவிருத்திகளைச் செய்ய முற்பட்டது. 1826 இல் பல திறமைமிக்க மாணவர்களை பிரான்ஸுக்கு அனுப்பிக் கல்வித் தேர்ச்சி பெற்று வந்த பின் கல்வி முறையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட கல்வி சம்ந்தப்பட்ட சர்வ அபிவிருத்திகளும் மேற்கொள்ளப் பட்டன. ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிற்கும் மாணவ தூதுக் கோஷ்டிகள் அதிகம் அனுப்பப்பட்டு வந்தது. அறிவில் கிழக்கு மேற்கு இரண்டும் எகிப்தோடு கைகோர்த்து முன்னேறின. இப்போக்கை மற்றைய இஸ்லாமிய நாடுகளும் பின்பற்ற மிக விரைவில் அறிவுத்துறை முன்னேற்றமடைந்தது. அரபி இலக்கியமும் புத்துயிர் பெற்று வளரத் தொடுத்தது. அச்சுத்தொழில், பத்திரிகைத் தொழில் இவையெங்கும் பரவலாயின.*

---

## முஹம்மது நபியின் முழுமதியே.

முழுமையே யாகலீல் அவ்னாகும்.
முஹம்மது நபியின் வழித்தோன்றலாகும்.
முஹ்யித்தீன் திருப்பாதம் சரணடைந்தோம்.
முழுமையில் பரிபூரணமாய் ஜெயமடைந்தோம்.
உண்மை முரீதின் கல்பே முஹ்யித்தீன் வாழும் அர்ஷாகும்.
உங்கள் புன்னகை எங்கள் வாழ்வின் அருளாகும்.

யாகலீல் அவ்ன் நாயகத்தின் அருவுருவே.
யாமுஹைய்யுதீன் யாஸின்அலி நாயகமே.
உங்கள் பார்வைப் பட்டால் எங்கள்
உள்ளங்கள் ஒளிபெறுமே. ஓஹோ (முழுமையே)

இறைவனை அறிந்திடும் ஞானம்தந்தீர்.
இணைவைக்காமல் வாழ தௌஹீதைச் சொன்னீர்.
மருள் நீக்கிய மாநபி எங்கள் ஆருயிர் வாப்பாநாயகம்.

மனிதராய் எங்களை வாழவைத்தீர்.
இம்மை மறுமையில் நல்வாழ்வு எங்களுக்களிப்பீர்.
அற்புத அகிலநாதர் எங்கள்ஆருயிர் வாப்பாநாயகம்.

கடலில் துளி தன்னை இழப்பதுபோல்.
குருவினில் நாங்கள் அழிந்தோமே.
ஹக்கில் ஹக்காய் இரண்டறக்கலந்து இன்பங்கள் அடைந்தோமே.

உங்கள் அன்புக்கு ஈடில்லை.
உங்கள் அருளுக்கு இணையில்லை.
நீங்கள் இன்றி நாங்கள் இல்லை ஷெய்குநாயகமே. ஓஹோ
(முழுமையே)

எவன் தன்னை அறிந்தானோ.
அவன் தன் ரப்பையறிந்தான் என்றுணர்த்தினீர் .
பேரின்பப்பாதையை காட்டித்தந்த ஆருயிர் வாப்பாநாயகம்.

இறை தானேதன்னில் தானானான்.
குருவில் தானே இறையைக்கண்டோம் .
பரமார்த்தத்தெளிவில் அறிவைதந்த ஆருயிர் வாப்பாநாயகம்.

யாகலீல் அவ்ன் நாயகம் என்றழைத்தோம்.
யாயாஸீன்அலி நாயகம் என்றழைத்தோம்.
அழைப்போர் குரலுக்கு அஹ்மதிய்யாவாக உதவிகள் புரிந்தீரே.

முஹம்மது நபியின் முழுமதியே.
யா முஹ்யித்தீன் வாப்பா நாயகமே.
உங்கள் பாதம் சரணடைந்தோம் ஸலாத்துன் ஸலாம். ஓஹோ
(முழுமையே)

M.பாத்திமா நாஜிதா
W/o Dr.முஹம்மது கலீல்மதுக்கூர்.
**இசை: முழுமதி அவளது முகமாகும்**

---

**குர்ஆன் முழுவதும் ஞானம்”** **(குர்ஆன் 36:2)**

**குர்ஆன் இறைவன் உங்களுக்கு வழங்கியுள்ள ஞானம்..**

**(குர்ஆன் 17:39)**

**தக்வாவுடன் (பயபக்தியுடன்) அணுகுபவருக்கு ஞானம் தரும் குர்ஆன்”.** **(குர்ஆன் 41:44)**



# மதுரஸா நன்கொடை



## திண்டுக்கல்

1. மதுரை **K.** புதூர் – **S.** சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/–ம்,

2. காரைக்கால் **R.A.** அப்துல் பாரூக் பாத்திமா, கடன்கள் அழிந்து குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500/–ம்,

3. சென்னை **S.** சர்மிளா உசேன் சதக்கா ரூ. 1000/–ம்,

4. எலந்தங்குடி ஷாஜஹான் சிங்கப்பூர் நல்லவிதமாக பயணம் செய்து நினைத்த காரியங்கள் நடக்கவும் உடல் ஆரோக்கியத்திற்கும் துஆ செய்ய ரூ. 500/–ம்,

5. காந்திகிராமம் **N.** பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 500/–ம்,

6. மதுரை சபியாம்மா குடும்பத்தினர் நாகூர் ஆண்டவர் மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 1000/–ம்,

7. கீழக்கரை ஆய்ஷத் மாபிதா மகனுக்கு வேலை கிடைக்கவும் மற்றும் நிய்யத்துக்கள் அனைத்தும் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/–ம்,

8. திண்டுக்கல் **M.** நதீர் **S/o J.** முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத்படி மாதாந்திர நன்கொடை ரூ. 1600/–ம்,

9. கிளியனூர் முஹம்மது ஃபஹிம் ஹாஜத்துக்கள் நிறைவேறவும் உடல் ஆரோக்கியத்துடன் நலமாக வாழ துஆ செய்ய ரூ. 500/–ம்,

10. திண்டுக்கல் **A.** சபியா பானு **W/o S.** காஜா நஜ்முத்தீன் நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 1001/–ம்,

11.மடத்துக்குளம் **S.P.** சேக் அப்துல்லா துஆ செய்ய மாதாந்திர நன்கொடையாக ரூ. 500 சாலிஹா பீவீ ரூ. 500/–ம்,

12.திண்டுக்கல் மர்ஹிம் **P.** கமருத்தீன் பேத்தியும் **Er.K.** முகம்மது நிசார் மகளும் "துஆ" முதலாம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு துஆ செய்ய சிறப்பு உணவுக்கு ரூ. 15000/–ம்,

13. சோழிங்கநல்லூர் ஜூஹி ஃபாத்திமா நிய்யத்து துஆ செய்ய ரூ. 1000/–ம்,

14. கும்பகோணம் மேலக்காவேரி **M.** அஷ்ரஃப் அலி அவர்களுக்கு அறுவை சிகிச்சை நல்லமுறையில் முடிந்து பூரண ஷிஃபா வேண்டி துஆ செய்ய ரூ. 1000/-ம்,

15. பாக்கம் கோட்டூர் அ. நஜீஹா நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/-ம்,

16. உத்தமபாளையம் முஹம்மது அப்துல்லாஹ் நிய்யத்து காணிக்கை துஆ செய்ய ரூ. 3192/-ம்,

17. பாக்கம் கோட்டூர் ஜவஹர் அலி துஆ செய்ய ரூ. 600/-ம்,

18. பாக்கம் கோட்டூர் பாத்திமா ஜின்னா துஆ செய்ய ரூ. 600/-ம்,

**மதுக்கூர்**

1. **M.M.** அபுபக்கர் அவர்களின் மறுமை வாழ்வு சிறப்புடன் இருக்க துஆ செய்ய ரூ. 1000/-ம்,

2.**N.P.O.M.** நத்தர்ஷா தனது மேலான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 2500/-ம்,

3. **M.** அப்துல் ஹமீது நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு ரூ. 2000/-ம்,

4. கலீபா **M.** முஸ்தபா பெயரன் ஸாக்கிர் உடல் நல பூரணசுகத்திற்காக துஆ செய்ய ரூ. 2000/-ம்,

5. **M.** அப்துல் அஹது தனது நாட்டங்களும் தேட்டங்களும் நிறைவேற ரூ. 3600/-ம்,

6. **O.P.U.A.** பஷீர் அஹமது பிள்ளைகளின் நல்வாழ்விற்கு துஆ செய்ய மாதசந்தா ரூ. 1500/-ம்,

7. கலீபா **M.** முஸ்தபா அவர்களின் குடும்பம் நல்ல பூரண சுகத்துடனும் நல்வாழ்வு வாழவும் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

8. **MMA.M.** முஹம்மது இம்ரான் தமது குடும்பம் மேலான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 24500/-ம்,

9. **N.** மெஹர் பானு ரூ. 500/-ம்,

10. **N.** ஷமீம் பேகம் தனது நாட்டங்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 1000/-ம்,

11. தங்கப்பொண்ணு (**D/o** முகம்மது அலி) தனது நாட்டங்கள் நிறைவேற வேண்டி துஆ செய்ய ரூ. 2500/-ம்,

12. பரக்கத்நிஷா **W/o** ஜஉபர்சாதிக் அபுதாபி உண்டியல் சேமிப்பு - தங்களுடைய நிய்யத்கள் நிறைவேற ரூ. 16550/-ம்,

13. அன்வர்தீன் **F/o** ஹம்தான் ரூ. 1000/-ம்,

14. **J.** நஸீரா ஜமால் பூரண உடல் நல சுகத்திற்கும் நீண்ட ஆயுளுக் கும் ரூ. 2000/-ம்,

**வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை வாப்பா நாயகம் அவர்கள் பொருட்டால் நிறைவேற்றியருள்வானாக! ஆமீன்**

சங்கைமிகு செய்குநாயகம் அவர்கள் நினைவுக் களஞ்சியம் நூல் வெளியிடபேராசிரியர் பெற்றுக்கொள்ளும் காட்சி



பேராசிரியரும் பெருங்கவிக் கோவும் ஜியாரத் பாத்திஹாவில்...



Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)

தொடர்புக்கு : 98940 94490
99445 76165




Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee